நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper — மக்கள் 06 — விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM — மக்கள் தினசரி — Peoples Daily

நாதம் 05 — திருவள்ளுவர் ஆண்டு 2025 — பங்குனி 11 — (24.3.94) — வியாழக்கிழமை — ஓசை 34

## 32,000 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

1989 மற்றும் 1990-இல் நியமிக்கப்பட்ட 32,000 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன; இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும்படியாக இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது; அத்துடன் புதிய சம்பளத்திட்டத்திலும் அமர்த்தப்படுவார்கள்; 1989-இல் நியமிக்கப்பட்ட 10,000 ஆசிரியர்களும், 1990-இல் நியமிக்கப்பட்ட 25,000 ஆசிரியர்களும் நான்கு வருடச் சேவையை முடித்ததும் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று கல்விச் சேவைகள் ஆணையாளர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார். மொத்தம் 35,000 ஆசிரியர்களில் சுமார் 32,000பேர் இப்பொழுது சேவையில் உள்ளார்கள். (6ஆம் பக்கம் பார்க்க)

## குமார் பொன்னம்பலத்தின் பொருள் பொதிந்த கிண்டல்

சட்ட அறிஞர்களின் பேரவையின் இவ்வருடத்திற்கான முதலாவது கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது; பேரவையின் பல்வேறு அங்கங்களை தெரிவு செய்வதற்காகவே பேரவை கூடியது;

யாழ்ப்பாண வலய தலைவர் பதவிக்கு எவருடைய பெயருமே பிரேரிக்கப்படவில்லை;

இந்நிலையில் பேரவையின் உறுப்பினர்கள் பலர் குமார் பொன்னம்பலம் இப்பதவிக்குப் போட்டியிட சம்மதிக்குமாறு கோரினர்;

இதைத் தொடர்ந்து மேடைக்குச் சென்ற குமார் பொன்னம்பலம் தேசிய பாரம்பரியத்திற்கு இணங்க நான் கடத்தப்பட்டு நியமனப் பத்திரத்தில் வலுக்கட்டாயமாக கையொப்பம் பெறப்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் அளவுக்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தும்பட்சத்தில் இத்தேர்தலுக்கு நாம் சம்மதிக்கக்கூடும்'' எனத் தெரிவித்தார்.

இதையடுத்து சபையில் பெரும் ஆரவார ஒலி எழும்பியது

## மகாபொல புலமைப் பரிசில் 4,400 மாணவருக்கு கிடைக்கும்

மகாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் இம் முறை 4,400 மாணவருக்கு வழங்கப்பட விருப்பதாக வர்த்தக, வாணிபத்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 3,800 மாணவருக்கு மட்டுமே இந்த புலமைப் பரிசில் வழங்கப்பட்டது; இத் தொகையை அதிகரிக்க வேண்டுமென வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் தெரிவித்த ஆலோசனைக்கு இணங்கவே மகாபொல புலமைப் பரிசில் பெறுவோரின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்;

ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்தம் ரூபா 950 இந்தப் புலமைப்பரிசில்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் என்றும் இதன் மூலம் வசதி குறைந்த மேலும் பல மாணவர்கள் உயர் கல்வியைப் பெறவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்;

1992-93 கல்வியாண்டுக்கான மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களுக்கும் அவர்களது தெரிவு குறித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன; அந்தக் கடிதத்துடன் மாணவர்கள் நிரப்பி வர்த்தகவாணிபத் துறை அமைச்சுக்கு அனுப்ப வேண்டிய படிவமும் அனுப்பி (6ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரதநிலைய அதிபராக குடாநாட்டில் மூவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்குமாக கடந்த வருடம் நடாத்தப்பட்ட பொதுப் போட்டிப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி புகையிரதத் திணைக்களத்தில் புகையிரத நிலைய அதிபர் புகையிரத எழுதுநர் ஆகிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டோரின் விபரங்கள் கிடைத்துள்ளன.

தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு செல்வன் ரி. பிரதீபன், 277, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய், எஸ். அகிலேஸ்வரன் இலகடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய், ரி. சர்வேஸ்வரன் விளானை, கலபூமி, காரை நகர்;

மேற்குறிப்பிட்ட இவர்கள் புகையிரத நிலைய அதிபர்களாக தெரிவாகியுள்ளனர்.

செல்வி எஸ். சிவரஞ்சனி "சிவமதி" துன்னாலை தெற்கு, கரவெட்டி, செல்வன் எஸ். சிவராசன் அற்கிலேசன் றோட், வட்டுக்கோட்டை தென்மேற்கு, வட்டுக்கோட்டை, செல்வன் ரி. கதிர்காமநாதன் 428, ஆஸ்பத்திரி (6ஆம் பக்கம் பார்க்க)

# போராடும் தமிழரை மதிக்காவிட்டால் இலங்கையில் சமாதானம் ஏற்படாது!

## இவர்கள் தைரியம் கண்டு மகிழ்கிறேன்; லண்டன் லூசியன் நகரமேயர் சின்னமணி

(லண்டன்)

"சிங்கள அரசு நல்ல முறையில் தமிழரை வைத்திருந்தால் இன்றைக்கு இச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. இப்பொழுது அங்கு இரு இன மக்கள் உள்ளனர் பெரும்பான்மை, சிறுபான்மை எனக் கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அரசு சிங்களவருக்காகவே

## தென்மாகாணவாக்காளர் உரிமையை பொலிசார் உறுதிசெய்ய வேண்டும்

மனித உரிமைகள் சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

தென்மாகாண சபைவாக்காளர் தமது வாக்குகளி

வின் அடிப்படை ஜனநாயக உரிமை எனவும் இதனைப்

யது பொலிசாரினது கடமையாகும் எனவும் அவர்கள்

சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. இப்பொழுது அங்கு இரு இன மக்கள் உள்ளனர் பெரும்பான்மை, சிறுபான்மை எனக் கூறுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அரசு சிங்களவருக்காகவே செயற்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை அங்கு தலை நிமிர்ந்து போராடுபவர்களை மதிக்காவிட்டால் சமாதானம் ஏற்படாது" இவ்வாறு அண்மையில் வடபகுதிக்கு வந்துதிரும்பிய லண்டன் லூசியன் நகரமேயர் சின்னமணி பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

பல தமிழர்கள் என்னை யாழ்ப்பாணம் செல்லுமாறு வற்புறுத்தியதையடுத்து நான் இலங்கைத் தூதுவரின் அனுமதியைப் பெற்று வடபகுதி சென்றேன்.

கேள்வி: அங்கு யார் யாரை சந்தித்தீர்கள்?

பதில்: பொதுமக்கள், அரச அதிபர், டாக்டர்கள், அதிமுகாம்அதிகாரிகள் என்பவர்களை சந்தித்தேன்.

கேள்வி: உங்கள் உணர்வலை என்ன?

பதில்: இந்தப்போரை நிறுத்த வேண்டும் என்ற உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது. போரை நிறுத்த சிங்கள அரசு முன்வர வேண்டும். அங்கு இரண்டு அரசகள் உண்டு. யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆட்சி இல்லை. சிங்களவர்கள் முன்பு தமிழர்களை கொடுமைப்படுத்தியுள்ளனர். இதை அவர்கள் ஒப்புகொள்ள வேண்டும். அதை ஏற்று நாட்டை ஒரே நாடாக வைத்திருப்பதாயின் அதற்கு புதிய அரசியல் தத்துவத்தை கண்டறிய வேண்டும். இதை கண்டுபிடிக்கக் கூடிய அறிவும் ஆற்றலும் இலங்கை மக்களுக்கு உண்டு. ஆனால் அரசியல் தலைவர்களுக்கு இதை கண்டுபிடிக்க ஆவல் இல்லை. இதற்கு பல காரணம் உண்டு. முக்கியமானது இருஇனங்களும் ஒருவரை ஒருவர் நம்பமுடியாத சூழ்நிலையில் வாழ்கின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான கொள்கையை முன்னெடுக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்

## தென்மாகாண மக்களிடம் டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தொடர்பாக தான் கொண்ட கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கும் விடுதலைப்புலிகளுக்கு மேலும் ஒரு பாடத்தை கற்பிப்பதற்கு தனக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை தருமாறும் ருகுணு மக்களிடம் தான் வேண்டுகோள் விடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தென்மாகாண சபை தேர்தல் பிரசார இறுதி கூட்டம் தங்காலையில் நடைபெற்ற போது இவ் வேண்டுகோளை அவர் விடுத்தார் பெரும்பான்மை மக்களின் தீர்ப்பு இன்று ருகுணு மக்களின் கையில் இருப்பதாகவும் எனவே எமது நாட்டை பிரிவினை வாதிகளிடம் ஒப்படைத்து பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நீங்கள் உதாசீனம் செய்யக்கூடாதென்றும் இதற்கு ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் அதனை மேலும் உறுதி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பிரதமர் புலிகளுடன் பேசத்தயார்; சபாநாயகர் வடக்கே போகிறார்

## இனப்பிரச்சினை இல்லை என்றால் இவை ஏன்?

(கொழும்பு)

வடக்குடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் உத்தேசத்தை கைவிடுமாறு முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி விஜேதுங்காவை கேட்டுள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை இன்னமும் வெளிவரவில்லைஇதேவேளை வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினை இல்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள் ஆனால் பிரதமரோ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என்று கூறிவருகிறார். சபாநாயகரோ யாழ்ப்பாணம் சென்று புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். மதத்தலைவர்கள் அடிக்கடி யாழ் சென்று புலிகள் இயக்கத்தவரை சந்தித்து வருகின்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் மோதலில் வீரச்சாவு



2-ம் லெப் குமரன்

முல்லை மாவட்டம் கோட்டைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற திடீர் மோதலின்போது போராளி

(6ஆம் பக்கம் பார்க்க)

தென்மாகாண சபை வாக்காளர் தமது வாக்குகளினால் மாகாண சபையை அமைப்பதை பொலிசார் உறுதி செய்யவேண்டும் என மனித உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாக்காளர் ஒவ்வொருவரும் சுதந்திரமாகதாம் விரும்பும் கட்சியின் அபேட்சகருக்கு வாக்களிக்கும் உரிமையுண்டு எனவும் இது மக்கள் உரிமை எனவும் இதனைப் பாதுகாக்க உதவ வேண்டியதாகும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# தென்மாகாண சபைக்கு அமரசிறியே முதல்வர்

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கு அமரசிறியே முதல் அமைச்சராகத் தெரிவுசெய்யப்படுவார் எனவும் இதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை எனவும் வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு தனது சிங்கள சேவையில் தெரிவித்தது.

இன்று தென்மாகாண சபைகளுக்காக நடைபெறும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முதல் அமைச்சரான அபேட்சகரின் பெயர் அமரசிறியென்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் முதலமைச்சரான அபேட்சகர் அமரசிறி தொடங்கொட என்பதும் தெரிந்ததே. இவ் இருவரில் எந்த அமரசிறி முதலமைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# டி. பியின் 10 மாதகால ஆட்சியின் பரீட்சைகளம்

(கொழும்பு)

பத்துமாதகால டி.பி. விஜேதுங்காவின் ஆட்சியை பரீசித்து பார்க்கும் ஒரு பரிசோதனை நிலையமாகவே தென்மாகாணசபை தேர்தலை எடுத்துக் கொள்ளலாம் என பி. பி. ஸி சிங்கள சேவை செய்தியாளர் எல்மோ பொனான்டோ தெரிவித்துள்ளார்.

இத் தேர்தல் ஆளும் கட்சிக்கு மட்டும் அல்ல எதிர்க்கட்சியின் தலைவிதியையும் நிர்ணயிக்கும் என்றும் எனவே இரு கட்சிகளும் தமது முழுப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கு

(வடமராட்சி)

வல்லை, வளைப் பகுதிகள் மீது உலங்குவானூர்தி ஒன்று நேற்றுக் காலை பரவலாக சுட்டது.

பலாலியில் இருந்து காலை 8 00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இவ் உலங்குவானூர்தி சில மணி நேரம் தொடர்ச்சியாக சுட்டது. (யோ)

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும் மூடப்பட்டிருக்கும் என்பதை பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# துணைப்படை வீரர்கள் இருவர் வீரச்சாவு

## ராணுவம் பதுங்கித் தாக்கியது

நெடுங்கேணிப் பிரதேச பண்டிவெட்டிச் சந்தியில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலின் போது துணைப் படை வீரர்கள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த நெடுங்கேணி வட்டத் துணைப் படைப் பொறுப்பாளர் லெப்டினன்ட் இ. சுப்பிரமணியம் (மருதோடை நெடும்

(6ஆம் பக்கம் பார்க்க)



லெப்டினன்ட் இ. சுப்பிரமணியம்



2-ம் லெப்டினன்ட் ஆ. செல்வராசா

## வரி விளம்பரம்


**காவேரி சீயாக்காய் பவுடர்**

சாயல்கள் ஐந்துமே மென்மையான சாற்றைப்போன்றதே: காவேரி சீயாக்காய் பவுடர் கூந்தல் அழகை வழங்குகிறது: வாழ்வில் நயமானதையே உங்கள் மேனி ஆவலுடன் எதிர்பார்க்கிறது. கந்தசாமி அன் சன்ஸ்.

(7808)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு இராச வீதி வெலிங்டன் தோட்டத்திற்கு அருகில் 6பரப்புக் காணி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு தொடர்பு: மா: வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (7817)


### இன்றைய நிகழ்வு

(தென்மராட்சி)

யாழ், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. ஜெயராசா தலைமையில் இடம்பெறும். (86)

### கும்பாபிஷேகம்

திருநெல்வேலி சிவன் கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும்.

### இசையாராதனை

கிறிஸ்கவேந்திரா சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனம் இசையாராதனை இன்று வியாழன் மாலை 4.30மணிக்கு கோவில் வீதியில் நடைபெறும்.

### சேவைநலம் பாராட்டு

பேராசிரியர் அ.துரைராசா அவர்களுடைய சேவை நலம் பாராட்டு விழாவொன்றினை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார். அத்துடன் பேராசிரியர் அவர்

# ஆளும் இனமாக தமிழினம் விரைவில் மாறும் என நம்புகிறேன்

## பிரிவுபசார விழாவில் துணைவேந்தர் துரைராஜா

எமது தமிழினம் இனிமேலும் ஆளப்படும் இனமாக இல்லாமல் ஆளும் இனமாக விரைவில் வரும் என நான் நம்புகின்றேன். எம்மை சிங்கள பேரினவாதம் பல வழிகளில் தாக்கினாலும் நாம் எமது முயற்சியில் தொடர்ந்து செயற்பட வேண்டும் என நேற்றைய தினம் கல்விசாரா ஊழியர்களினால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசிய பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் குறிப்பிட்டார்.

எமது யாழ் பல்கலைக் கழகம் வெறும் ஆராய்ச்சியில் மட்டும் ஈடுபடாது அவை மக்களுக்கு கிடைக்கத்தக்க வகையில் உழைக்க வேண்டும் எமது மண்ணில் இயற்கையாக காணப்படும் வளங்களைக் கொண்டு அதற்கேற்ப மனிதவளங்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். இதற்கு பின்வரும் மூன்று காரணிகளில் அக்கறை உடையதாக இருக்க வேண்டும் என்று தனது உரையில் தெரிவித்தார்.

முதலாவதாக விவசாயம் தொடர்பான அபிவிருத்தியில் அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டும் இதனை விவசாய பீடம் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும் என்றும் இரண்டாவதாக பொறியியல் பீடம் இங்கு அமைக்கப்படல் வேண்டும் இதன் மூலம் இங்கு காணப்படும் வளங்களை தொழினுட்ப முறையில் அபிவிருத்தி செய்து கொள்ள முடியும் என்றும் இப் பீடம் எம் மத்தியில் இல்லாது விடினும் இதை அமைப்பதற்கு தொடர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபடல் வேண்டும் என்றும் மூன்றாவதாக கடல்வளம் பற்றிய துறையில் மூலவளம் செலுத்தப்படுதல் வேண்டும் இதன் மூலம் எதிர்காலத்தில் பல தொழில் முன்னேற்றங்களை செய்யக் கூடியதாக மனிதவளங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும் இதன் மூலம் எதிர்காலத்தில் பல நன்மைகளை இச்சமூகம் பெற்றுக்கொள்ள முடியும் இதற்காக கடல்வளம் பற்றிய துறையினை விருத்தி செய்வதற்காக முல்லைத்தீவில் கடல்வளம் பற்றிய பீடம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்தார்.

ஊழியர் சங்கங்களைப் பொறுத்தவரையில் தங்களிடையே ஒற்றுமையுடையவர்களாக இருக்கவேண்டும் இதன் மூலமே அவர்களது கோரிக்கைகளை வெற்றிகரமாக செயல்படவைக்க முடியும்; மேலும் இங்குள்ள ஊழியர் தொடர்ந்தும் தமக்கான பதவிகளில் தொடர்ந்து இராமல் வகுப்புகளிலும் மற்றும் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிலும் கற்று முன்னிலைக்குவர அவர்கள் பாடுபடவேண்டும் என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

இப்பிரிவுபசார வைபவத்தினைத்தொடர்ந்து பல கலை நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது (07), (05)

ஒப்ரேசன் யாழ்தேவியால் பாதிக்கப்பட்ட

# அல்லிப்பளை - புலோப்பளை மக்களுக்கு புதிய குடியேற்றம்

(தென்மராட்சி)

புலோப்பளை - அல்லிப்பளை பகுதியில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 44 குடிசைகள் கொண்ட குடியேற்றத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். அரசன் குடியேற்றத்திட்டம் என பெயர்சூட்டப்பட்ட இக் குடியேற்றத்திட்டத்தை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வினை தென்மராட்சி புனர்வாழ்வுக்கழக பொறுப்பாளர் திரு. இளியன் மற்றும் இளிநொச்சி - பளை உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரை ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைத்து தொடக்கி வைத்தனர். தென்மராட்சி உதவி அரசியல் துறை பொறுப்பாளர் திரு. கலைவாணன் தேசியக்கொடியை ஏற்றினார். அதைத் தொடர்ந்து தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் திரு. வீமன் மாவீரர் அரசனின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்தார். அதைத் தொடர்ந்து குடிசைகளை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு திரு. கரிகாலன், தென்மராட்சி சிறப்புத்தளபதி திரு. கந்தண்ணா, தென்மராட்சி உதவித்தளபதி திரு. தக்காளி ஆகியோர் கையளித்தனர். இந்நிகழ்வில் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (86)

### சாவு தந்த வாழ்வு

140அடி நீள பிரமாண்ட மேடையில் 'சாவு தந்த வாழ்வு' இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி இன்று மாலை 6.30 மணிக்கு உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெறும் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார்

### நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணம்

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரிச்சங்க அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் விசேட ஆணையாளர் திரு. கா. சந்திரராசா அவர்கள் தலைமையில் மானிப்பாய் பட்டின பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் நடப்பு வருட நிர்வாக சபை உறுப்பினர்களாக மேற்படி பிரதேச சபைச் செயலாளர் திரு. இ. கணேஸ்வரன் அவர்கள் தலைவராகவும், திரு. சே. மகாலிங்கம் செயலாளராகவும், திரு செ. மனோகரன் பொருளாளராகவும் மொத்தம் 11 பேர் கொண்ட குழு உறுப்பினர்களாகவும்ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (41)

### பொதுக்கூட்டம்

தொல்புரம் வடபிரதேசநல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிறு காலை 9.00 மணியளவில் தொல்புரத்திலுள்ள சம்மேளனப் பணிமனையில் தலைவர் திரு. இ. செங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தின் போது புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெறவுள்ளது. (41)

# பூநகரித் தாக்குதல் நமக்கு நல்ல படிப்பினை

- ரணில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளின் திடீர்த் தாக்குதலை எதிர்கொள்ள அரச படைகள் தயார் நிலையில் உள்ளனர் பூநகரித் தாக்குதல் எமக்கு ஒரு பாடமாக அமைந்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.





140 அடி நீளமான பிரமாண்டமான மேடையில்

"சாவு தந்த வாழ்வு"

(இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி)

24-03-1994 இன்று

மாலை 6.30 மணி

உரும்பராய், புனித மிக்கேல் ஆலயம்.

எமது பாடுகளை இயேசுவின் பாடுகளோடு ஒன்றிக்க அன்புடன் அழைக்கிறோம்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

(7827)

வடமாகாண தெங்கு வளம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

**பதவி வெற்றிடம்**

1. பதவி:- வாகனச்சாரதி

சம்பளத் திட்டம்:- 1005—1705 / 40×5 - 50×10

தகைமைகள்:- 8-ம் வகுப்பு கல்வித் தகைமையுடன் கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரமும், ஐந்துவருடத்திற்குக் குறையாத அனுபவமும்

வயதெல்லை:- 25 முதல் 45 வரை

2. பதவி:- வாகனச் சுத்திகரிப்பாளர்

சம்பளத் திட்டம்:- 905—1605 / 40×5—50×5

தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் 15-வது சம்பளத் திட்டத்தில் 1வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 8-ம் வகுப்பு கல்வித்தகைமையுடன் நல்ல திடகாத்திரமான உடல்நிலை உடையவராக இருத்தல் வேண்டும்

வயதெல்லை:- 25 — 45 வரை

(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது).

பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் எமது அலுவலகத்தில் விண்ணப்பப் பத்திரம் பெற்று பூர்த்தி செய்து 31-3-94ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர் வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம் இல.499 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம், யாழ்ப்பாணம்.

இல. 499, காங்கேசன்துறை வீதி (ஃ-8897)

கலந்து கொள்ளவிருக்கிறார். இத்துடன் பேராசிரியர் அவர்களது சேவைகளைப் பற்றி "பல்கோணப் பார்வையில் பேராசிரியர்" என்னும்சிறப்பு நிகழ்ச்சியில் பலர் கருத்துரை வழங்கவிருக்கின்றனர். நாதஸ்வரக் கலாநிதி திரு. என்.கே. பத்மநாதன் அவர்கள் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். இந்நிகழ்ச்சியில் அனைவரையும்பங்குகொண்டு பேராசிரியரைக் கௌரவிக்கும்வண்ணம் சம்மேளனத்தினர் அன்புடன் அழைக்கின்றனர் சிறப்பாகச் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள், பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் ஊழியர்கள் ஆகியவர்களைத் தவறாது இவ்விழாவில் கலந்து கொள்ளும் வண்ணம்கேட்டுக்கொள்கின்றனர்.

## நிர்வாகிகள் தெரிவு

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின்மானிப்பாய் பங்குஉப அலுவலகத்தை சார்ந்த சனசமூக நிலையங்களுக்கான உப சமாசத்தின் நடப்பு ஆண்டிற்குரிய புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவுக் கூட்டம் அண்மையில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. செ. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேஜர் சுபாஸ் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. நா. கஜேந்திரன் தலைவராகவும், கட்டுடை சனசமூக நிலையத்தைச்சேர்ந்த திரு. ஆ. கந்தசாமி செயலாளராகவும், பாரதி சனசமூக நிலையத்தைச் சேர்ந்த திரு. க. திருநாவுக்கரசு பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதோடு இவர்கள் உட்பட மொத்தம் 8 உறுப்பினர்கள் கொண்ட சபையும் ஏகமனதாகத் தெரிவாகியது.

(41)


எமது உளங்கனிந்த

## நல்வாழ்த்துக்கள்

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் வெளிக்கண்டல் சந்தி, கண்டாவளையில் நிர்மாணித்துள்ள வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்ற பனம் சீனித் தொழிற்சாலையும் அத்துடன் இணைந்த வடிசாலையும் இன்று 24-03-94ஆந் திகதி காலை 9-00 மணி தொடக்கம் செயற்படவுள்ளதையிட்டு எமது பாராட்டுக்களையும் உளங்கனிந்த நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சங்கானை, சுண்ணாகம், தெல்லிப்பழை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், வலிகாமம் கொத்தணியும்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

(இ-8881)



## நினைவு கூருகின்றோம்...

**1994-03-24**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-கோட்டையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**அல்போன்ஸ்** (தெய்வேந்திரன் செல்வச்சந்திரன்-செட்டித்தெரு, நல்லூர்-யாழ்)

**நாகு** ([illegible] — இளவாலை)

1989-ம்ஆண்டுகிளாலியில்இந்தியப்படையினர்மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**றோம்** (சின்னத்துரை கோணேஸ்வரன்-மச்சாய் வீதி. சாவகச்சேரி)

1991-ம் ஆண்டு மணலாற்றில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**குன்றன்** (சுப்பிரமணியம் குமாரவேல்-புளியம்பொக்கணை, பரந்தன்-கிளிநொச்சி)

1992-ம் ஆண்டு மன்னார்-சிலாவத்துறை முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.மதுரலிங்கம்** (சந்திரபோல் அன்ரன் பெர்னாண்டோ-மருத்துவமனைவீதி-மன்னார்)

பூநகரி - கல்முனையிலிருந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில்பலியானகுருநகரைச்சேர்ந்த15வயதுஇளைஞன்

மணலாறு - நெடுங்கேணியில் சிறிலங்கா விமானப் படையினர் நடாத்திய விமானக்குண்டு வீச்சில் பலியான யாழ்- திருநெல்வேலியைச்சேர்ந்த ஆசிரியர்,

1993-ம் ஆண்டு கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கரம்பனைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்,

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8896)

# வடபகுதியில் இன்றைய சூழ்நிலை தொடர அனுமதியேன்

**- டி. பி. விஜேதுங்கா**

(கொழும்பு)
பிரபாகரன் தென்பகுதிக்கு வந்து செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆனால் தென்பகுதி மக்கள் எவரும் வடபகுதிக்கு சென்று திரும்ப முடியவில்லை. இவ்வாறான நிலைமை தொடர்ந்தும் நீடிப்பதை அனுமதிக்க நான் தயாராக இல்லை. இவ்வாறு ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் இங்கு வருவதை நிறுத்தும் அதேவேளை தெற்கு மக்கள் வடக்கு செல்லக் கூடிய நிலையை உருவாக்குவேன் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

அகுறணையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் இன்றுள்ள பயங்கரவாத நிலை ஓர் புற்று நோய்க்கு ஒப்பானது எனவே அதற்கு ஒரு தீவிர சிகிச்சை செய்யப்படவேண்டும். இதற்கு முதல் நடவடிக்கையாக யாழ். குடாநாட்டை சுற்றி வளைத்து அவர்களை பணியவைக்க வேண்டும் அதன் பின்னர் அங்கு என்ன நடக்கிறது என்பதை பார்க்க வேண்டும். இதன் மூலம் அவர்களை முழுமையான ஓர் பலவீன நிலைக்கு தள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரான்சிஸ்கோவிற்கு இப்படியும் ஓர் அவலம்

(கொழும்பு)
பிரான்சிஸ்கோ வெற்றி அடைவதற்கு அவருக்கு விருப்பு வாக்குகளை அளிக்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர்களும், அபேட்சர்களும் இரகசிய பிரசாரம் செய்துவருகின்றனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது இவர் ஐக்கிய தேசிய கட்சியினரால் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து தென் மாகாண சபை கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மாகாணசபை கலைக்கப்பட்டதைத்தொடர்ந்து இவர் ஐக்கிய தேசிய கட்சியின் அபேட்சகராக மீண்டும் இதே மாகாண சபைக்கு போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகையாளருக்கு கொலை மிரட்டல்

(கொழும்பு)
தென்மாகாணசபை தேர்தல் தொடர்பாக நடைபெறும் வன்முறை சம்பவங்கள் குறித்து செய்தி வெளியிட்டமைக்காக 'லக்திவ' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தினருக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும்கட்சியான ஐ. தே. கட்சி தேர்தல் வன்முறைகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருவதாக இப்பத்திரிகை நேரடியாகவேசெய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் விசேட ஒருங்கமைப்பு குழு எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் குழுவினரே தொலைபேசிமூலம் இந்த மிரட்டலை விடுத்துள்ளனர்.

ஓராண்டு நீங்காத நினைவஞ்சலி
திதி 24 - 03 - 1994



தோற்றம்:
10 - 04 - 1943

## ஐ.தே.க விற்கு எதிராக பிரேமதாசா விசுவாசிகள்

(கொழும்பு)
ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள பிரேமதாசா விசுவாசிகள் தென்மாகாண வாக்காளரிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனரென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரேமதாசாவின்முன்னணி ஆதரவாளர் குழு வொன்று தென்மாகாணத்திற்குச் சென்றுதென்மாகாணஐக்கிய தேசியகட்சி ஆதரவாளரிடம் இவ் வேண்டு கோளை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி பிரேமதாச காலத்திலே அபிவிருத்தி மேற் கொள்ளப்பட்டதாகவும் ஆனால் தற்போது அவரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் ஐக்கிய தேசிய கட்சியினர் முற்பட்டு வருவதாகவும் இது மிக மனவருத்தத்திற்கு உரியது எனவும் அக்குழுவினர்தெரிவித்துள்ளனர்.

இக் குழுவினருக்கு மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதி சபாநாயகருமான காமினி பொன்சேகாவும் பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசாவும் பின்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் வெளிப்படையாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் கதிரை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

### கண்டெடுப்பு

சின்னதம்பி இராமலிங்கம், அன்னபூபதி கந்தவனம் ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

# இலக்கத் தகடில்லாத வாகனத்தில் ஆயுதபாணிகள் பவனி

(கொழும்பு)
தென்மாகாணத்தில்பொலிஸார் வன்முறையை முறியடிக்கும் முகமாகத் அதிக அளவில் நிறுத்தப்பட்டுள்ள போதும் இலக்கத்தகடு அற்ற வாகனங்களில் ஆயுதக் கும்பல் சர்வசாதாரணமாக பயணம் செய்வதாக நிமால் சிறிபால சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தில் இருந்து சிங்கள பி.பி.சி சேவையாகிய சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்ட டி மு ஜயரட்னபாராளுமன்ற உறுப்பினர் விளக்கமறியலில் இருக்கும் போது சட்டத்தரணிகளை சந்திப்பதற்குக்கூட அனுமதி வழங்கவில்லையென்றும் இது பொலிஸார் காட்டும் கட்சி வேறுபாட்டை காட்டுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்

இவ் இலக்க தகடு அற்ற வாகனங்களை தம்மால் தடுத்து நிறுத்த முடியாது தென்றும் எனெனில் அவர்களிடம் ஆயுதம் இருப்பதாகவும் இதனை பொலிஸாரே தடுத்து நிறுத்த முற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

### இன்றைய நிகழ்ச்சி

(வடமராட்சி)
கரணவாய் மணியகாரன் தோட்டம் அ. த. க. பாடசாலைவருடாந்தஇல்லவிளையாட்டுப் போட்டி இன்று

## புலியின் வாலைப் பிடித்த சிங்கள அரசியல்வாதிகள்

**தினேஷ் குணவர்த்தனா**

(கொழும்பு)
நாம் இன்று புலிகளின் வாலைப்பிடித்துக் கொண்டு தடுமாறுகிறோம். இதனால் எமது நாட்டின் பொருளாதாரமும். வருமானமும் விரயமாகின்றது என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறினார்

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்அவசரகாலசட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டுபேசிய அவர் மாகாணசபை என்ற வெள்ளையானைக்கு அரசு ஊட்டி வளர்த்து பணத்தை விரயமாக்குகிறது மாகாண சபையினால் அடைந்தது ஒன்றுமில்லை.

வடக்கு கிழக்கு இணைப்பு மாகாணசபைகள் உருவானதால் ஏற்பட்டதாகும். இது பலாத்காரமான ஓர் இணைப்பு. ஜனாதிபதி தனது அதிகாரம் மூலம் வடக்கையும் கிழக்கையும் பிரிக்க உடன்நடவடிக்கை எடுக்க வேண்டும் என தினேஷ் குணவர்த்தனா மேலும் தெரிவித்தார்.

*அரசசார்பற்ற நிறுவனங்கள்*

## அரச செயலகத்தை நாட முடிவு

(யாழ்ப்பாணம்)
இடம்பெயர்ந்தோர் முகாம்களை பராமரிக்கும் விடயத்தில், தம்மீது பாரிய சுமை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தனதுசக்திக்குஉட்பட்ட வகையில்இடம்பெயர்ந்தோர் முகாம்களை பராமரிக்க அரச செயலகம்உதவவேண்டுமெனவும், இதற்காக அரசசெயலகத்தைநாட இருப்பதாகவும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வட்டாரங்கள் கூறியுள்ளன.

யாழ்ப்பாண அரசாங்க செயலகம் இடப்பெயர்ந்தோர் முகாம்களை பராமரிக்கும் விடயத்தில் உதவமுன்வந்தால் அரசசார்பற்ற நிறுவனங்களின் பளு குறையும் எனவும் கூறிய அவ்வட்டாரங்கள் இது விடயத்தில் யாழ் செயலக புனர்வாழ்வு பிரிவுடன் தொடர்பு கொள்ளப்படும் எனவும் தெரிவித்தன.

*நொத்தாரிசிடம் இருந்து*

## காணி உறுதி பெறாதோர் விபரங்கள் அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)
யாழ் காணிப் பதிவகத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் தொடர்பில் காணிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு நீண்டகாலமாக உறுதிகளின் மூலப் பிரதிகளை பிரசித்த நொத்தாரிசுமார்களிடமிருந்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அது பற்றிய விபரங்களை எழுத்து மூலம் யாழ். காணிப்பதிவாளருக்கு நேரடியாகவோ தபால் மூலமோ சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

உறுதிகளை எழுதும் பிரசித்த நொத்தாரிசுமார்களில் பலர் கடந்த சில வருடங்களாக உரிய முத்திரைகளை ஒட்டி இணைப் பிரதிகளை சமர்ப்பிக்காதுள்ளனர்.

சிலர் கடந்த காலங்களில் தாங்கள் எழுதிய உறுதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையையும் எடுக்காது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதனால் உறுதிகளுக்கு உரியவர்கள் தங்கள் உறுதிகளைப்பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணங்களைஉரிய திணைக்களங்களுக்கு மீளளிப்புச் செய்ய முடியாத நிலைமைக்கு ஏற்பட்டுள்ளதாகவும் காணிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

## கரவெட்டி கோட்டத்தில் கூடுதல் அணிகள் தெரிவு

(வடமராட்சி)
வடமராட்சியில் இருந்து மாவட்ட மட்டத்திலான உடற்பயிற்சி போட்டிக்கு கரவெட்டி கோட்டத்தில்இருந்து கூடுதலான அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கரவெட்டி கோட்டத்தில்இருந்து பத்து அணிகளும் பருத்தித்துறை கோட்டத்தில் இருந்து மூன்று அணிகளும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

பருத்தித்துறை கோட்டத்தில் பெண்கள் அணிகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. 15 வயதுக்குள் வடஇந்து மகளிர் கல்லூரி, 17 வயதுக்குள் வடஇந்து மகளிர் கல்லூரியும் 19 வயதுக்குள் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியும் முறையே தெரிவு செய்யப்பட்டன.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற வலய மட்டத்தில் போது தெரிவு செய்யப்பட்டனர். எதிர்வரும் 26ஆம்திகதி யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ள மாவட்ட மட்டபோட்டிகளில் பங்குபற்றுவர். (யோ)

மலேசியா திருப்பி



10 - 04 - 1943

மறைவு:

03 - 04 - 1993

## திருமதி இரத்தினம் அன்னம்மா (யோகா)

என்றென்றும் எம் உயிர் அம்மாவே
இனிய எம் தெய்வமே - அம்மா
ஆறாது மாறாது அழுதாலும் தீராது
உங்கள் இழப்பும் பிரிவும்


எங்கள் அன்புத் தெய்வத்தின்
இழப்பை நீங்காத நினைவுகளுடன்
நினைவு கூரும்...

அன்புக் கணவர், பிள்ளைகள்
மருமக்கள்;

நுணாவில் மேற்கு
சாவகச்சேரி,

(7822)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
11 .03 1964

வீரச்சாவு
24.03. 1987

### வீரவேங்கை அல்போன்ஸ்

தெய்வேந்திரன் செல்வச்சந்திரன்

தமிழ் ஈழச் செல்வனே உமது நினைவுடன்
தமிழ் ஈழத்தாயகத்தை விரைவில் மீட்போம்
எங்கள் உன்னத தலைவர் மீது ஆணை;

-குடும்பத்தினர்

நல்லூர் (7812)

யாட்டுப் போட்டி இன்று அதியர் திரு.வல்லிபுரம் தலைமையில் நடைபெறும்;

ஃ ஃ

(வடமராட்சி)

அல்வாய்க்கிளை இலங்கைச் சேவைமன்றத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு அல்வாய் (கன்னைகை) மாதரங் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

(யோ)

### நியமனம்

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் புதிய மேற்பார்வையாளராக திரு. க. நடேசபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்;

மேற்படி வைத்தியசாலையில் பல மாதமாக இப்பதவி வெற்றிடமாக இருந்தமையினால் வைத்தியசாலை நிர்வாகம் இன்னல்களை எதிர்நோக்கியதாகவும் இவரின் நியமனத்தைத் தொடர்ந்து இவை சீர்செய்யப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன;

### மாரடைப்பால் மரணம்

வீதியில் சென்று கொண்டிருந்த விறகு வியாபாரி ஒருவர் மாரடைப்பால் வீதியிலே வீழ்ந்து மரணமான பரிதாப சம்பவம் ஒன்று கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இவ்வாறு மரணமானவர் கண்ணாபுரம் கொடிகாமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சுந்தரலிங்கம் (வயது 47) எனத்தெரியவந்துள்ளது.(36)

### மனநோயாளி சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னார் பஸ் நிலையத்தில் இருந்த பொதுமகன் ஒருவர் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது;

இவர் சிங்கம் என அழைக்கப்படுவார் என்றும் இவர் மனநோயாளியெனவும் மேலும் தெரியவருகின்றது.

# பேரினவாதத்திற்கு அஞ்சி நடுங்கும் சிங்கள அரசியல் தலைவர்கள்

(கொழும்பு)

சிங்களத் தலைவர்கள் பெளத்த சிங்களப் பேரினவாதத்திற்கு மிகவும் அஞ்சுகின்றனர் பெரும்பான்மை சிங்கள மக்களும் மௌன நிலையிலேயே உள்ளனர்; இதனால் சிங்களத் தலைவர்களால் ஓர் உடன்பாட்டிற்கு வரமுடியவில்லை என சோஷல் ஜஸ்டிஸ் எனும் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது;

பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தின் அடிப்படை உரிமைகளை மதித்தல் சமாதான வழி ஏற்படும் பலமான பொதுசன அபிப்பிராயத்துடன் ஒரு நியாயமான சமாதானத்திற்காக வன்முறையற்ற சமூக வலுவோடு முன்வரா விட்டால் தேசத்தை காப்பாற்ற முடியாது.

போரினால் பல பகுதிகள் அழிந்துள்ளன. ஒரு லட்சம் அகதிகள் உள்ளனர் பயப்பீதியில் வாழ்கின்றனர் மிகப் பெரும் சுயநலப்போக்குள்ள அரசியல் தலைவர்கள் நாட்டை பாழடையச்செய்ய அனுமதித்து விட்டோம் என அச் சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது;

## கிழக்கு தேர்தலில் புலிகள் குறுக்கிடவில்லை

### பொலிசாரே அத்துமீறினர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் எமது தேர்தல் பணிகள் கிழக்கில் பாதிக்கப்படவில்லை அவர்கள் தலையீடு செய்யவும் இல்லை பொலிசாரே அத்துமீறி அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாக முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ஹிஸ்புல்லா தெரிவித்தார்;

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பொலிசாரை ஆளும் கட்சியினர் தமது ஆயுதமாக பாவித்தனர் எமது பிரசார நடவடிக்கைகள் பொலிசாரால் குழப்பப்பட்டது எனது கார் நொருக்கப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

### அனுப்பியது

மலேசியாவில் இருந்து சிங்கப்பூருக்கு கடக்க முயற்சி செய்த யாழ்ப்பாண வாசிகள் இருவர் மலேசியா பொலிசாரால் பிடிபட்டு இலங்கை திருப்பியனுப்பப்பட்டனர்;

இவர்கள் எல்லையைக் கடக்கும்போது இவர்கள் வைத்திருந்த பணம் பொருட்கள் என்பன பொலிசாரால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு நாடு திரும்பியவர்களில் நவாலியூர் கந்தசாமி பாலு ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

### கோரிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரசித்த நொத்தாரிசுமார்களும் 1990 டிசம்பர் வரை தங்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட உறுதிகளின் இணைப் பிரதிகளையாவது ஏப்பிரல் 30க்கு முன்பு காணிப்பதிவாளரிடம் தவறாது சமர்ப்பித்தல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்;

## சிங்களவரையும் பௌத்தத்தையும் காப்பதுவே எமது நோக்கம்

### சிங்கள மகா சம்பத் பூமி புத்திர கட்சி

(கொழும்பு)

சிங்கள இனத்தையும் புத்த தர்மத்தையும் காப்பாற்றுவதே சிங்கள மகாசம்பத் பூமி புத்திர கட்சியின் நோக்கம் என அதன் தலைவர் ஹரிஸ்வன்த விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் பூஸா எனுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் புத்தசமயம் எங்கள் நாட்டின் அரசாங்க மதம் என பிரகடனம் செய்யப்படுவதுடன் இலங்கை சிங்களவர்களின் நாடு என்பதும் உறுதிப் படுத்தப்படல் வேண்டும். நாம் ஆட்சிக்கு வந்தால் தொண்டமானினதும் அவரின் ஆட்களினதும் வாக்குரிமைகள் பறிக்கப்படும்; சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வாக்குரிமையை பறிக்க முடியுமானால் ஏன் தொண்டமானின் வாக்குரிமையை பறிக்க முடியாது? எனவும் கேள்வி எழுப்பிய அவர் அடுத்த பொதுத் தேர்தலின் போது தமது கட்சி நாடு முழுவதும் வேட்பாளர்களை நிறுத்தப் போவதாக கூறியதுடன் நாட்டை காப்பாற்றும் அளவிற்கு எதிர்க் கட்சிகளுக்கு சக்தியில்லை எனவும் குறிப்பிட்டார்.

## காரைநகர் கடலில் மீனவர்மீது தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளில் ஒன்றான கசூரினா பீச் தாம்பிக்பிட்டி நிலையிலிருந்து நேற்று முன் தினம் காலை7.20மணியளவில்சுழிபுரம்சவுக்கடித்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதலையும், துப்பாக்கி சூட்டு தாக்குதலையும் மேற்கொண்டனர்;

இத் தாக்குதல் சம்பவத்தினை அடுத்து கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களும் அவசர அவசரமாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் கரைசேர்ந்தனர்

(41)

### பாலர் பாடசாலை திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன், உடுத்துறையில் பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கநெறியாளரும், வடமராட்சி கிழக்கு கிற்றூர்திச் சங்கத் தலைவருமான திரு. மு. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா வைபவத்தின் போது, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கநெறியாளர் திரு. இராசநாயகம் சம்பிரதாயபூர்வமாகப் பாடசாலையைத் திறந்து வைத்தார்; (36)

# தொழிற்சாலைத் திறப்பு விழா

## கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## வெளிக்கண்டலில் இன்று 24-03-1994 ஆரம்பிக்கும்

## தொழிற்சாலை சிறப்புடன் இயங்க வாழ்த்துகின்றோம்



### எமது ஆணையாளரின் வாழ்த்துக்கள்

### பல்லாண்டு கால நினைவு செயலாக உருவானது

பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களின் எண்ணத்தில் இருந்த ஆசை இன்று உருவமைக்கப்படுகின்றது. இந்த நாள் தொழிலாளர்களின் இனிய நாளாகும். கிளிநொச்சிப் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்கள் இந் நோக்கத்தின் வெற்றியை வடிவமாக்கித் தந்துள்ளனர்.

இக் கன்னி முயற்சியில் மிகுந்த விருப்பமும், நம்பிக்கையும் வைத்து, முழு இலங்கைக்கும் முன்னோடியான திட்டத்தைச் செயற்படுத்திய இத் தொழிலாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர்களை நான் வாழ்த்துகிறேன்.

இரண்டாம் ஈழப்போரின் உள்ளேயும், பொருளாதார இறுக்கத்தின் மத்தியிலேயும் நின்று கொண்டு எமது சீனித் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு வேண்டிய அனைத்து உலோகப் பொருட்களையும் தாமே தருவிக்கும் பொறுப்பைச் சுமந்து கொண்டு, இத் தொழிற்சாலையினை வெற்றிகரமாக உருவாக்கித் தந்திட்ட பெருமைக்குரியவர்கள் யாழ் ஈறோவில் பொறியியல் ஸ்தாபனத்தாராகும்.

இவர்களுக்கு எனது நன்றிகள் உரியதாகும், தொழிற்சாலைக் கட்டிடம் கட்டுவதற்கான இடத்தையும், கட்டிடம் கட்டுவதற்கான மூலப் பொருட்களையும் பெற்றுத் தந்துதவிய வன்னி நிலப்பரப்பு விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு என்றும் என் மேலான நன்றிகள் உரியது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் அவர்களின் அன்பினால், இத்தொழிலகத்திற்குரிய உலோகங்களும், உதிரிப்பாகங்களும் தருவிக்கப்பட்டு எமக்குக் கிடைத்தன அம் முயற்சிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

இப் புதிய முயற்சி தமிழீழம் முழுமைக்கும் பொதுவானதாகும். தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் இதைப் போன்ற பல ஆலைகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளதின் அவசியத்தை மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும், இதற்கான ஒத்துழைப்பைத் தருதல் வேண்டும்.

தமிழீழ பொருளாதார வளர்ச்சிக்கான இத் தொழிற்சாலையின் பயனை உரிய முறையில் வளர்த்தெடுப்பதில் தமிழீழ மககளின் ஆதரவைக் கேட்டுக்கொண்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்,

தி. சுவாரத்தினம்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

### வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

### சமாசத் தலைவரின் ஆசிச் செய்தி

தமிழீழத்தின் பிரதான மூலவளங்களில் ஒன்றான பனையினை முறையாகப் பயன்படுத்தி காலத்தின் தேவை அறிந்து சேவை செய்யும் நோக்கில், எமது அங்கத்துவ சங்கமான கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இன்று இயந்திர பொறிமுறையை உள்ளடக்கிய பனம் சீனி ஆலையையும், வடிசாலையையும் திறந்து வைக்கும் நிகழ்வு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வரலாற்று நிகழ்வு என்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

பனம் சீனி உற்பத்தியானது எமது மண்ணில் 1916-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அவ் உற்பத்தித் துறையின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியே இருந்தது காரணம் இத்துறையின் வளர்ச்சிக்கு போதிய ஆராய்ச்சியோ, தொழில்நுட்ப அறிமுகங்களோ, நிதிப்பங்களிப்புகளோ எம்மை ஆட்சி செய்து வந்த அரசினால் கிடைக்காதமையும், இவ் வளத்தோடு பிணைந்திருந்த மக்கள் கூட்டம் மேற்குறித்த வசதிகளை வளர்த்துக் கொள்ளாமையும் ஆகும்.

ஆனால் பனை தென்னை வளங்களைப் பயன்படுத்தும் நாம் இன்று நிறுவனமயப்பட்டதுடன், இத்துறையை வளர்வுறச் செய்ய பொருத்தமானவர்களை இனங்கண்டு அவர்களின் உதவியோடு ஆய்வுகளும் தொழில் நுட்பங்களையும் பெற்றுக்கொண்டதன் விளைவாக எதுவித அரச நிதியும் இன்றி முழுமையான உடல் உழைப்பாளிகளான பனம் தொழில் வல்லுநர்களின் உழைப்பினால் சேமித்த பணத்தின் மூலம் இத் தொழிற்சாலை அமையப்பெற்றுள்ளமை தொழிலாளர்களாகிய எமக்கு மன நிறைவைத் தருகின்றது.

தமிழீழ சுதந்திர விடிவிற்காக எம்மண்ணில் போராட்டம் நடக்கும் இவ்வேளை, சிறிலங்கா அரசின் பொருளாதார தடைகளுக்கு சவால் விடும் நோக்கில் எம் மண்ணில் வாழ்வோருக்கு எம் மண்ணில் உள்ள வளத்தைப் பயன்படுத்தி உதவும் எண்ணத்துடன் உருவாக்கிய இத் தொழிற்சாலை சிறந்த துணிச்சலான கூட்டுறவுத் திணைக்கள வழிகாட்டலுடன், சமாசத்தின் ஒத்துழைப்புடனும், ஈறோவில் ஸ்தாபனத்தாரின் தொழில்நுட்ப ஆலோசனையுடனும் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் இடர்மிகு இக்காலத்தில் பல இலட்ச ரூபா முதலீட்டோடு இவ்வள அபிவிருத்தியில் அக்கறையுள்ள அனைவரது உதவியுடனும் எமது அங்கத்துவ சங்கம் ஒன்று நிர்மாணித்துள்ளமை குறித்து இச்சங்கத்தின் நிர்வாகிகளின் விடா முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது

இப் பனம் சீனி ஆலை தனது சேவையை பாரிய அளவில் செய்து எமது மக்களுக்கும் இத்தொழில் சார் அங்கத்தவரின் சமூக மேம்பாட்டிற்கும் வழிகாட்டி சிறப்பான சேவை செய்து நிறைவோடு பல்லாண்டு செயல்பட்டு காலவோட்டத்தோடு மேலும் புதிய பரிணாமத்தை அடைந்து தமிழீழத்தின் தொழிலாள சமூகத்தின் தொழிற்சாலையாக மக்களுக்குச் சேவையாற்றி மேலோங்க வேண்டுமென மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

சா. செல்வரெட்ணம்

499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்

### வாழ்த்துவோர்:

**வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி**

பருத்தித்துறை ப.தெ வ அ கூ சங்கம்
கரவெட்டி ப.தெ வ.அ கூ சங்கம்
அச்சுவேலி ப.தெ வ.அ கூ சங்கம்

**பணிப்பாளரும் பணியாளரும்**

**தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி**

கொடிகாமம் ப தெ. வ அ கூ சங்கம்
சாவகச்சேரி ப. தெ வ அ கூ. சங்கம்

**பணிப்பாளரும், பணியாளரும்**

**யாழ்ப்பாணம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி**

யாழ்ப்பாணம் ப தெ வ அ கூ. சங்கம்
கோப்பாய் ப. தெ வ அ கூ சங்கம்
அரியாலை ப. தெ வ. அ கூ. சங்கம்
ஊர்காவற்றுறை ப தெ வ அ கூ சங்கம்
வேலணை ப தெ வ. அ கூ. சங்கம்

**பணிப்பாளரும் பணியாளரும்**

**வலிகாமம் ப தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணி**

சங்கானை ப. தெ. வ. அ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு ப தெ. வ அ. கூ. சங்கம்
தெல்லிப்பழை ப. தெ வ. அ, கூ சங்கம்
மானிப்பாய் ப- தெ- வ- அ- கூ- சங்கம்
சுன்னாகம் ப- தெ- வ- அ- கூ- சங்கம்
கோண்டாவில் ப. தெ- வ- அ- கூ- சங்கம்

**பணிப்பாளரும் பணியாளரும்**

**முல்லைமாவட்ட தெ ப.பொ.உ.வி,கூ,சங்கங்களின் இணையம்**

பா/துணுக்காய் தெ- ப- பொ- உ- வி- கூ- சங்கம்
ஒட்டுசுட்டான் தெ ப பொ உ வி கூ சங்கம்
முல்லை மேற்கு தெ ப பொ உ வி கூ சங்கம்
முல்லை தெற்கு தெ ப பொ உ வி கூ சங்கம்
முல்லை வடக்கு தெ ப பொ உ வி கூ சங்கம்
முல்லை கிழக்கு தெ ப பொ உ வி கூ சங்கம்
புதுக்குடியிருப்பு தெ ப பொ உ வி கூ சங்கம்
பூநகரி ப தெ வ அ கூ சங்கம்

**பணிப்பாளரும் பணியாளரும்**

**சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்**

**பணிப்பாளரும் பணியாளரும்**

அன்புடன்,
தி. சுவாரத்தினம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சா. செல்வரெட்ணம்
தலைவர்,
வடமாகாண ப.தெ.வ.அ கூ ச சமாசம்

பணிப்பாளரும் பணியாளரும்

# பனம் சீனி உற்பத்தியின் வரலாற்றுப் பார்வை

தமிழீழத்தின் நிலப்பரப்பில் 60,650 ஏக்கரில் 110இலட்சம் பனை மரங்கள் இருப்பதாக 1971ஆம் ஆண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் நடாத்திய ஆய்வின் மூலம் அண்ணளவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தனக்கென விசேட சிறப்பியல்புகளைக் கொண்ட பனை வளமானது மக்களின் பயன்பாட்டிற்காக பல வழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது சாற்று உற்பத்திகளாகவும், பனம்பழ உற்பத்திகளாகவும் ஓலை உற்பத்திகளாகவும் தும்பு உற்பத்திகளாகவும், மர உற்பத்திகளாகவும் இன்றைய எமது தேவை கருதி கூடிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறாக பயன்படுத்தப்படும் முறையில் பல்வேறு நவீன முறைகள் கையாளப்பட்டு புதிய தொழில்நுட்ப வடிவங்கள் மூலம் உற்பத்திகள் அபிவிருத்தி செய்யப்பட்டுவருவதை அவதானிக்க முடிகிறது இந்தநிலையில் பனம் சாற்றை பயன்படுத்திப்பெறும் பனம் சீனி உற்பத்தியும் அபிவிருத்தி அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பனம் சீனி உற்பத்தியானது 1915ஆம் ஆண்டில் 'சுத்திகரித்த சீனி நிறுவனம்' என்ற வெளிநாட்டுக் கொம்பனியினரால் வடமராட்சிப் பகுதியில் வேய்சில் என்னும் தொழில்துறை நிபுணரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுசிறப்புற தொழில்பட்டதாகவும், பின் முதலாம் உலக மகாயுத்தத்தின் காரணமாகவும் பதநீர் உற்பத்தியாளர்கள் கலப்படம் செய்ததன் காரணமாகவும் இந்த நிறுவனம் செயற்படா தொழிந்தது எனவும் சான்றுகள் தெரிவிக்கின்றன.

இதன் பின்னர் பல ஆண்டுகாலமாக இம் முயற்சிபற்றி சிந்திக்காது 1956ஆம் ஆண்டில் இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பனம் சீனி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அம் முயற்சி முன்னெடுத்துச்செல்லப்படாத நிலையில் மீளவும் உற்பத்தி முயற்சி கைவிடப்பட்டது.

இவ் உற்பத்தியை மேலும் முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்ற எண்ணத்தோடு மீளவும் 1972ஆம் ஆண்டு ப.தெ.வ அ. கூ. சங்கங்கள் நிறுவனமயப்பட்ட காலத்தில் கீரிமலையில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட பனம் பொருள் நிலையத்தில் பனம் சீனி உற்பத்தி செய்யப்பட்டது. இந் நிலையத்தில் இலங்கை கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிநிறுவனத்தால்நடாத்திய ஆய்வுகளும் பயன்படுத்தப்பட்டன.

பனம் சீனியானது 1974, 1975ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட சீனியின் அதிகரித்த விலையை ஈடுசெய்வதற்காகபனை.தெ.வ அ. கூ.சங்கங்களில்பருத்தித்துறை சண்டிலிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் மிகக்குறைந்த அளவில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும்1977ம்ஆண்டில்ஸ்ரீலங்கா அரசினால் வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்த சீனியின் விலை மிகக் குறைவாகக் காணப்பட்டமையால் சீனிக்குப் பதிலாக ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள் செய்து வந்த பனை வெல்லம், பனம் சீனி உற்பத்தியை கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

மீளவும் சீனியின் விலை 1980ஆம் ஆண்டின் முற்பகுதி தொடக்கம் அதிகரிக்கத் தொடங்கியதன் விளைவாக 1980 ஐப்பசி மாதத்தில் யாழ் செயலகத்தில் நடந்த பனம் சீனி உற்பத்தி பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள் இவ் உற்பத்திக்குப் போதிய ஆர்வம் காட்டியதன் விளைவாக யாழ். மாவட்ட திட்டமிடல் பகுதியினால் இவ் உற்பத்திக்கான திட்டம் முன்வைக்கப்பட்டது

இத்திட்டத்தின் கீழ் 5பனம் சீனி உற்பத்தி நிலையங்கள் சாவகச்சேரி, கொடிகாமம், அச்சுவேலிபருத்தித்துறை, சங்கானைஆகியஇடங்களில்ஆரம்பிக்கப்பட்டன. இவ்ஒவ்வோர் நிலையத்திற்கும் 4 அல்லது 5 மைல் சுற்றளவிற்குள் பதநீரைபாணியாக்கும்10தொழிலகங்கள் அமைக்கப்பட்டன. தொடர்ந்தும் சீனி உற்பத்திக்கான புதிய இயந்திரங்கள் பெற ஒவ்வொர் சங்கத்திற்கும் மூன்று இலட்சம் ரூபா தேவைப்படும் என அப்போது மதிப்பீடு செய்யப்பட்டது நாளொன்றிற்கு 25,000 கிலோ சீனி உற்பத்தி செய்வதெனவும் ஐந்து தொழிற்சாலைகளிலுமிருந்து பருவகாலத்தில் 200 நாட்களில் 5,00,000 கிலோ பனம்சீனி உற்பத்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் 1982இல் யூன் முடிவில் சரசாலையில் அமைந்த தொழிற்சாலை மூலம் 3000 கிலோ சீனி மட்டும் உற்பத்தியாக்கப்பட்டது ஏனைய தொழிலகங்களில் மூன்று பூர்த்தியாக்கப்பட்டிருந்தும் அவை முழுமையாகச் செயற்படக்கூடிய அரசியல் சூழ்நிலை எமது பிரதேசத்தில் அமைந்து கொள்ளவில்லை.

எமது பிரதேசத்தில் பனம் சீனியின் தலா நுகர்வு 35இறாத்தலாகும் எனவே எம் மண்ணில் வாழும் 10 இலட்சம் மக்களுக்கும் 15,600 தொன் தேவையாகிறது இவை வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் எமது நுகர்வு தேவையை எம் மண்ணில் உள்ள பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தின் தீர்த்துக் கொள்ள முடியும்.

ஒரு சாதாரண பனைதனது பருவ காலத்தில் 14 கிலோ சீனியை வழங்கும் தன்மை உடையதாகவுள்ளது ஆனால் நாம் 15,000 தொன் சீனியை உற்பத்தி செய்ய 4,50,000 பனைமரங்களை22,500 பனம் தொழில் வல்லுநர்களின் உதவியுடன் பயன்படுத்தல் வேண்டும், அது சாத்தியமாகாதவிடத்து தற்போது இயங்கும் 7500 பனம் தொழில் வல்லுநர்கள் மூலம் 1,41,000 பனை மரங்களைப் பயன்படுத்தின் 5000 தொன் சீனியை நாம் பெற வாய்ப்புண்டு.

இவ்வாறான தகவல்கள் இருப்பினும் இவ் உற்பத்தித்துறை 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசின் தாராள இறக்குமதிக் கொள்கையாலும் பொருளாதார விலைக் கொள்கையாலும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஆறு வருடங்கள் கழிந்து 1990ஆம் ஆண்டளவில் தமிழீழ விடிவிற்காக ஒரு தர்ம யுத்தம் முன்னெடுத்துச் செல்லப்பட்ட வேளை ஸ்ரீலங்கா அரசு எமக்கு ஏற்படுத்திய பொருளாதாரத் தடைகளின் அழுத்தத்தின் விளைவாகவும் எம் மண்ணில் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கருதி மீளவும் இவ் உற்பத்தியில் ப. தெ. வ-அ. கூ சங்கங்கள் முனைப்போடு செயல்பட ஆரம்பித்தன. பனை வெல்ல உற்பத்தியையும் பனம் சீனி உற்பத்தியையும் பெருமளவில் செய்வதற்காக தம்மாலான முயற்சிகளைச் செய்ததுடன் இத்துறைசார் நிபுணர்களின் தொழில்நுட்ப ஆலோசனைகளுடன் திறம்பட செயலாற்றியதன் விளைவாக.

| ஆண்டு | பனைவெல்லம் | பனம்சீனி |
|---|---|---|
| 1990 | 3565 கிலோ | - |
| 1991 | 97356 ,, | 15906 கிலோ |
| 1992 | 100847 ,, | 13054 ,, |
| 1993 | 220106 ,, | - |

உற்பத்தி அபிவிருத்தி முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் பனம் சீனி, பனம் வெல்லம் ஆகியவற்றின் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவது இவ்உற்பத்தியை சந்தைப்படுத்தும் அளவுக்கு நட்டத்தையே தழுவியிருப்பினும் பனம் சீனி உற்பத்தி மூலம் பெறப்படும் உப விளை பொருளான பாணியில் இருந்து (மொலாசஸ்) செறிவு கூடிய மதுசாரத்தை உற்பத்தி செய்வதாலும், உற்பத்திச் செலவுக்குப் பிரதான காரணியாகவுள்ள விறகுப் பயன்பாட்டைக் குறைக்கும் முயற்சிகளுக்கான ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் எதிர்காலத்தில்இக்குறைபாடுகளை நீக்கலாம் எனும் நம்பிக்கை உண்டு.

உதிரிகளாக ஆங்காங்கு பிரதேச ரீதியில் செய்யப்பட்ட பனம் சீனிஉற்பத்தியை நவீன முறையில்வடிவமைத்துசிறந்த தொழில்நுட்ப முறையில் தரமான உற்பத்தியைசேதமின்றி பெறும் வகையில் ஈறோவில் பொறியியல் ஸ்தாபனத்தினர் வடிவமைத்ததுடன் குறைந்த விறகுப் பாவனையையும் ஏற்கனவே உள்ளதன் (செம்பாதி குறைவாக) பயன்படுத்தும் அளவிற்கும் இலங்கையின் முதலாவது பொறித் தொகுதியுடைய பனம் சீனி ஆலை முழுக்க தொழிலாளர்களின் உழைப்பினால் சேகரித்த பணத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு இன்று திறந்துவைக்கப்படுகிறது.

நாளொன்றிற்கு 6000 போத்தல் பதநீரை பயன்படுத்தக்கூடியதாகவும் 300 கிலோ சீனியை உற்பத்தி செய்யக்கூடியதாகவும் 300 போத்தல் செறிவு கூடிய மதுசாரத்தை உற்பத்தி செய்யக் கூடியதாகவும்அமையப்பெற்ற இவ்வடிசாலை கிளிநொச்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம் தனது சுய முயற்சியில் நிர்மாணித்து குறைந்தது 50 பெயருக்கு வேலை வாய்ப்பும் வழங்கவுள்ளது. இத் தொழிற்சாலையின் செயற்திறனை அறிந்துகொண்டுயாழ்மாவட்டத்திலும் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

பனம்சீனி உற்பத்தித்துறையில் பரிணாம வளர்ச்சியில் 1994ஆம் ஆண்டு மார்ச்மாதம் 24-ம் திகதி ஒரு முக்கியமான நாளாகவும், தமிழீழத்தின் பயன்மிக்கதொழிற்சாலையாகவும் தேசிய வளத்தை பயன்படுத்தும் தொழிற்சாலையாகவும் இன்று ஆரம்பிக்கும் தொழிற்சாலை இந்த மண்ணில் வாழும் மக்கள் பனை வளத்தைமுழுமையாகப்பயன்படுத்த முன்வரின் எமது தேவையை நாமே எம் மண்ணில் பெற்று வளமாக வாழ வழிகிட்டும் என்பதில் ஐயமில்லை இத் தொழிற்துறை வளர இத்துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் உரியவர்களுக்குக் காலத்திற்குக் காலம் தெரியப்படுத்தி இத்துறை மேலும் வளர்ச்சிபெற ஒத்துழைப்போமாக.

இ. சிவநேசன்
பொதுமுகாமையாளர்
வடமாகாண ப.தெ.வ. அ. கூ.
சங்கங்களின் சமாசம்.
யாழ்ப்பாணம்.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பணிப்பாளரும், பணியாளரும்.
(சி-8892)

### சிந்தனைக்கு

அதிகாரத்தை நாடி சுதந்திரத்தைப் பறி கொடுப்பது விபரீத ஆசை.

ஃபிரான்ஸிஸ் பேக்கன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## அதிகார வெறி

யாழ்ப்பாணம் மீது படை எடுப்பதானால் 20,000க்கு அதிகமான உயிர் இழப்புக்கள் ஏற்படும். அந்த இழப்புக்களின் மத்தியில் யுத்தம் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலை தோன்றும். இவ்வாறு 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட பல இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்திடம் தெரிவித்ததாக அண்மைக்காலத்தில் வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகவலை இதற்கு முன்னரும் சில அரசியல்வாதிகள் குறிப்பிட்டிருப்பினும் தற்பொழுது சிறிலங்காவின் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் மாத்தறையில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசும்போது ஊர்ஜிதம் செய்துள்ளார். டென்சில் கொப்பேகடுவ உட்பட இராணுவ அதிகாரிகளின் இக்கணிப்பீடு பெரும்பாலும் சரியான தொன்றே. போரின் தீவிரத்தைப் பொறுத்து அதற்கு மேற்பட்ட உயிரிழப்புக்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் அன்று சுமார் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டதும், நெருக்கமான குடியிருப்புக்களைக் கொண்டதுமான யாழ். குடா நாட்டில், பெரும் தாக்குதல் ஒன்று இடம்பெறுமானால் இவ்வாறாக ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதிலும் இன வெறி கொண்ட இராணுவத்தால் மக்கள் பெரியளவில் பாதிக்கப்படப் போவது தவிர்க்க முடியாதது. இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய போது கிழக்குமாகாணத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை சிங்கள இராணுவம் கொன்று குவித்தமை இதற்கொரு பொருத்தமான உதாரணமாகும்.

இதேவேளை அன்று போரைத் தவிர்ப்பதற்கு இராணுவத் தலைமை கூறிய ஆலோசனைக்கு உயிரிழப்பைச்சுட்டிக் காட்டினும் அதற்கு வேறு பல காரணங்கள் இருக்கலாம். இராணுவ நடவடிக்கையில் வெற்றிகிட்டுமா என்ற சந்தேகம், வெளியில் இருந்து வரக்கூடிய அழுத்தங்கள் எனப் பல காரணங்கள் இருப்பினும் பெருந்தொகை உயிரிழப்பைச்

# 1000 அனாதை குழந்தைகளை தத்தெடுக்கும்

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் புதிய திட்டம்

தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினாலும், பொருளாதாரத் தடையினாலும், பல்வேறு கோணங்களில் பாதிப்படைந்துள்ள மக்களுக்குக் கைகொடுக்கும் நோக்கமாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முகம் கொடுத்து வருகின்றது. இவற்றில் ஒரு திட்டமான 1000 குழந்தைகளைத் தத்தெடுக்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் இன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்படுகின்றது. இத்திட்டம்பற்றிய நோக்கம், செயற்பாடுகள் பற்றி ஆராய்கின்றது இக்கட்டுரை.

இலங்கையின் வடக்குகிழக்கு பிரதேசங்களில் தொடர்கின்ற யுத்தம் தமிழ் மக்களை சமூக பொருளாதார நிலைகளில் கடுமையாகப் பாதித்து வருகிறது. வீட்டுக்கு வீடு கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர் என அவலங்கள் பரந்து காணப்படுகின்றன.

இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில், பாதிப்புக்குள்ளானவர்கள் மீது, அடுத்தவர் அனுதாபப்பட முடியுமே யல்லாமல், அவர்களைப் பாதுகாக்க முடிவதில்லை. உதாரணமாக அண்ணன் இறக்க, அண்ணனின்குழந்தைகளைப்பராமரிக்கத் தம்பிவிரும்பினாலும் அவரது பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை.

ஒரு குழந்தை பெற்றோரை இழந்த பின்னர் அவரது உறவினர்களுடன் வாழ வாய்ப்பிருக்குமாயின் அதனை ஊக்குவிப்பதே சிறந்ததென உளவியல் நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இந்தவகையில் கூடுமானவரை பெற்றோரை இழந்த குழந்தைகளை உறவினர்களுடனும் தந்தையை இழந்த குழந்தைகளை தாய்மாருடனும் வாழ வழி காட்டுவதே முக்கிய நோக்கமாகக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் இக் குழந்தைகள் இலக்குநிலையில் தனதுமனத் தாங்கல்களை ஓரளவு குறைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கும்.

இப்பின்னணியை மையமாகக் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து பாதிக்கப்பட்ட, உதவி தேவைப்படுகின்ற 1000 குழந்தைகளைத் தெரிவு செய்யும். குறிக்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்து சுயமாக உழைக்கும் வரை- ஆகக் கூடிய காலம் குழந்தை 21 வயதை அடையும்வரை இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும். உதவி வழங்க வேண்டிய தொகைகள் வயதெல்லைகளைப் பொறுத்து மாறுபடும். கீழே குறிப்பிட்டுள்ள வகையில் வகுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 01 — 03 வயதுக் குழந்தைகள் | | ரூபா 500.00 |
| 04 — 05 ,, பாலர் கல்வி | | ,, 400 00 |
| 06 — 10 ,, ஆண்டு 5வரை | | ,, 450.00 |
| 11 — 13 ,, ஆண்டு 8வரை | | ,, 500.00 |
| 14 — 17 ,, பல்கலைக்கழக | புகுமுக வகுப்பு | ,, 800.00 |
| 18 — 21 ,, பல்கலைக் கழகம் | | ,, 1200.00 |

தெரிவு செய்யப்படும் குழந்தைகளின் தொகை 1000 ஆகும். மாவட்ட ரீதியாக நோக்கும்போது யாழ் மாவட்டத்தில் 300 குழந்தைகளும், வடக்கு கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஏனைய ஏழுமாவட்டங்களிலும், ஒரு மாவட்டத்திற்கு 100 குழந்தைகள்வீதம் ஏழு மாவட்டங்களிலும் 700 குழந்தைகளும் தெரிவு செய்யப்படுவர்.

ஒவ்வொரு பிரிவுக் குழந்தைகளுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் தனித்து ஒருகுழந்தையின் முழுமையான செலவுகளுக்கும்போதுமானதாக இருக்காது. எனினும் குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் உறவினருக்கு கைகொடுக்கும் நடவடிக்கையாக இத்திட்டம் அமையும்.

மேற்படி விபரத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேசக் கிளைகள் அந்தந்த நாடுகளில் பகிரங்கப்படுத்தும். இதனடிப்படையில் மனித நேயத்துடன் ஆதரவற்ற இக்குழந்தைகளுக்கு கைகொடுக்கத் தமது சௌகரியங்களை தியாகம் செய்ய முன்வருகின்றவர்கள் தமது பெயர்களை அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளுடன் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யும்போது குழந்தைகளுக்கான ஓராண்டுக்கான சராசரித்தொகையான-150 அமெரிக்க டொலர்களை முற்பணமாகச் செலுத்தவேண்டும்.

மேற்படி விபரங்களுடன்சம்பந்தப்பட்டவர்கள் தாம் விரும்புகின்ற குழந்தையின் வயது தொடர்பான விபரங்களையும் பதிவு செய்யமுடியும். இவ்விபரங்கள் கிடைத்தவுடன் ஒவ்வொருவருக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள குழந்தைகளின் விபரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளைகள் ஊடாக அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள்குழந்தைகளுடனும், பாதுகாவலர்களுடனும் நேரடித் தொடர்புகள் வைக்கவும், தகவல்களைப் பெறவும் முடியும். மாதாந்தம் அக்குழந்தைக்குரிய தொகையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளையில் ஒப்படைக்கவேண்டும். இங்கு குழந்தைகளுக்குரிய தொகை எங்களால் வழங்கப்படும். குழந்தைகளின் உதவித்தொகை ஆண்டுக்கு ஆண்டு மாறுவது கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

இதனடிப்படையில் அதிகமான குழந்தைகளைப் பொறுப்பேற்பதற்காக உழைத்த எமது சர்வதேசக் கிளைகளும், தனிநபர்களும்தனித்தனியாகக் கௌரவிக்கப்படுவார்கள்.

குழந்தைகள் தெரிவு செய்யப்படும்போது குழந்தையின் தகுதி-குழந்தை பெற்றோரை இழந்தவராக, தந்தையைஇழந்தவராக, தாயை இழந்து தந்தையால்புறக்கணிக்கப்பட்டவராக அல்லது தாய் தந்தையர் இருந்தும் இருவராலும் புறக்கணிக்கப்பட்டவராக இருக்கவேண்டும். தெரிவு செய்வதில் அவ்வப் பகுதி கிராம சேவையாளர், பாடசாலைஅதிபர்கள்போன்றவர்களின் அனுசரணையோடுதெரிவு செய்யப்படுவர். கல்வித்தகுதியினையும் தேவையையும் கருதி வயதெல்லை உயர்கல்வி முடிவு வரை நீடிக்கப்படலாம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தைகளைத் தெரிவு செய்வதுடன் நின்றுவிடாமல் இது சம்பந்தமான சகல விடயங்களுக்குமான முழுமையான பொறுப்பையும் நேரடியாகப் பொறுப்பேற்று, பொறுப்பேற்கும் குழந்தைகளுக்காக வழங்கப்படும் உதவிகள் முழுமையாகப் பயன்படுகின்றதா என்பதையும்மாதாந்தம்ஆராய்ந்துதிருப்திகரமாகஉள்ளதா எனஉறுதிசெய்வதுடன், இதற்காகப் பொறுப்பேற்றவருக்கு அதை சொல்லும் பொறுப்பும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுடையதாகும். பொறுப்பேற்க விரும்புகின்ற பெற்றோரின் விருப்பத்தேர்விற்கு முடிந்தவரை இசைவாகக் குழந்தையை வழங்கும் நிலையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுடையதாகும்.

குழந்தைகளின் பாதுகாவலர் குழந்தையை ஒழுங்காகப் பராமரித்து கல்வியை வழங்குகின்ற பொறுப்பைக்கொண்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்வதுடன், குழந்தைக்கான கல்வியை, பராமரிப்பை முறையாக வழங்கவில்லை எனக் கருதுமிடத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குழந்தையைப்பொறுப்பேற்று விடுதியில் சேர்த்து பராமரிக்க வழி சமைக்கும். கட்டுப்பாடும், கண்ணியமும் உடைய பாதுகாவலராகப் பராமரிப்பவர் இருப்பர். தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ அல்லது பொறுப்பேற்கின்ற பெற்றோரோ குழந்தையுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடவும், தகவல்களைப் பெறவும் உரிமையுடையவர்களென்பதை இவர்கள் அங்கீகரிக்கவேண்டும்.

இறுதியாகப் பொறுப்பேற்கும் பெற்றோரைப் பொறுத்தவரையில், இவர்கள் தங்கள் குடும்பத்தில் ஒரு பிள்ளையை எவ்வாறு கவனிக்கின்றார்களோ அதுபோன்று இக்குழந்தை சுயமாக வாழத் தொடங்கும் வரை பராமரிக்க வேண்டிய கடப்பாடுஉள்ளது. பாதுகாவலர் முறையாகப் பராமரிக்கவில்லையெனத்தமிழர் புனர்வாழ்வுக் கழகமோ அல்லது பொறுப்பேற்ற பெற்றோரோ கருதுமிடத்து இக்குழந்தையைநேரடியாகத்தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரிக்கத் தேவையான மேலதிக பணத்தை வழங்க வேண்டியது அவசியம். பொறுப்பேற்கும் குழந்தையைப் பராமரிப்புநிலையத்தைவிட்டு வேறு இடத்திற்கோ அன்றி வெளிநாடு ஒன்றிற்கோ அழைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

— கதிர்

இராணுவ நடவடிக்கையில் வெற்றிகிட்டுமா என்ற சந்தேகம், வெளியில் இருந்து வரக்கூடிய அழுத்தங்கள் எனப் பல காரணங்கள் இருப்பினும் பெருந்தொகை உயிரிழப்பைச் சந்தித்த வண்ணம் போரிட முடியாது என்ற அச்சம் சிறிதளவேனும் இராணுவ அதிகாரிகளின் மத்தியில் இருந்தே உள்ளது. இதற்குக் காரணம் உயிரிழப்புக்கள் குறித்து கண்டனங்கள் எழுந்தால் அரசியல்வாதிகள் ராணுவத்தின் தலையில் பழியைப் போட்டுவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்.

இந்நிலையிலேயே இராணுவம் தாக்குதலுக்குப் பின்னடித்தது. ஆனால் இராணுவத்தின் தலைமையில் போர் குறித்து குழப்பநிலை இருந்த போதும் சிறிலங்காவின் அரசியற் தலைமையில் போர் குறித்த குழப்பம் ஏதும் இருக்கவில்லை. எவ்வாறெனினும் தமிழர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும், அடக்கி ஒடுக்கப்பட வேண்டும் என்ற வெறித்தனத்தையே அரசியல்வாதிகள் கொண்டிருந்தனர். இவ்வெறித்தனமானது ஜே.ஆரில் இருந்து டி.பி. விஜேதுங்கா வரை போதிய அளவில் இருந்தது.

இந்நிலையிலேயே இராணுவத் தலைமை செய்ய அஞ்சியதை அரசியற்தலைமை செய்யத் துணிந்தது; தமது இராணுவத்திற்குப் பதிலாக இந்திய இராணுவத்தைப் பயன்படுத்தியது. தமிழருக்கு எதிராக இந்திய இராணுவம் போரிடுவது கண்டு மகிழ்ச்சியும் அடைந்தது. இவ்வாறு இந்திய இராணுவத்தை பயன்படுத்தியதை 'புத்திசாலிகளின் நடவடிக்கை' என டி.பி. விஜேதுங்கா கருதுமளவிற்கு அவரின் இனவெறி இருந்தது.

ஆனால் அன்று மட்டுமல்ல, இன்றும் தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையையே டி.பி. விஜேதுங்கா ஆதரிக்கின்றார். அவர் தமிழரின் அழிவைப் பற்றிச் சிந்திக்கத் தயாராக இல்லை. 1987இல் இருந்ததை விட இன்றைய இராணுவச் சூழ்நிலை வித்தியாசமானது; தாக்குதல் நடத்தப்பட்டால், முன்னர் தெரிவித்ததைவிட உயிரிழப்பு அதிகமானதாக இருக்கக் கூடிய வாய்ப்பு அதிகம் என்பதையும்கூட அவர் கருத்திற்கொள்ளத் தயாராக இல்லை.

எது எவ்வாறு ஆயினும் டி.பி. விஜேதுங்காவைப் பொறுத்து தமிழர்கள் நசுக்கப்பட வேண்டும், பௌத்த பேரினவாதத்தின் தலைமையை தான் ஏற்க வேண்டும் என்பதும், இதன் மூலம் தொடர்ந்தும் சிறிலங்காவின் தலைமைத்துவத்தை தான் வகிக்க வேண்டும் என்பதே அவரது விருப்பமாகும்; அதாவது சிங்கள அரசியல்வாதிகளின் அதிகார வெறி ஒரு இனத்தையே கொன்றொழிக்கத் தயாராகவுள்ளது என்பதே யதார்த்தநிலையாகும்.

# வடபகுதிக்கு தரைவழி பொருள் விநியோகம்; அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி நடவடிக்கை

வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களின் தேவையை நிறைவு செய்வதற்காக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் மூலமாக இப்பொருட்கள் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கிறது என்ற அறிவித்தல் வெளியாகி பல வாரங்கள் கழிந்துவிட்டன. இப்பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்கான நடைமுறைத்திட்டம் ஒன்றும் மேற்படி அறிவித்தலுடன் வெளியாகியிருந்தது. இத்திட்டப்படி அத்தியாவசியப்பொருட்கள் வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டதா என்ற கேள்விக்கும் இவ்வாறு பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்டாலும் வடபகுதியின் அத்தியாவசியப் பொருட்களின் முழுமையான தேவை பூர்த்தி செய்யப்படுமா என்பதற்கும் விடை தேடினால் இல்லை என்ற ஒரே பதில்தான் கிடைக்கும்.

அதேவேளை நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் வடபகுதியின் அத்தியாவசிய சேவைகளைச் சீராக்குவது குறித்து திடீரென்று அரசுக்கு அக்கறை பிறந்தது ஏன்? தரை மார்க்கமான பொருட்களின் விநியோகத்துக்கு அரசு ஊக்கமூட்டுவதற்குரிய காரணம் என்ன? மேற்படி விநியோகத்தை மேற்கொள்வதற்காக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் சார்பில் தனியார் வர்த்தகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதன் பின்னணி என்ன? இவ்வாறான கேள்விகளுக்குப் பதில்தேட முயலும் போதுதான் அரசின் மேற்படி நடவடிக்கைக்குப் பின்னணியில் நடந்தது என்ன என்பது குறித்துப் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அரசு அறிவித்த திட்டம் பூரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்துவருவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. ஆனால் வெளிச்சந்தையைவிட கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின்விலை பொதுவாக அதிகமாகவே இருக்கும் இதற்கு ஏற்பவே விற்பனை விலையும் அமையும்.

மேற்படி ஸ்தாபனத்தினூடாக யாழ். குடாநாட்டுக்கு அத்தியவசியப் பொருட்களை விநியோகிப்பது என்பதும் குறிப்பிட்ட கால இடைவெளியில் குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்து வரப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதும் அவற்றைக் கணிப்பீடு செய்து கொள்வது என்பதும் சாதாரணமாகச் சாத்தியப்படக் கூடிய விடயங்கள் அல்ல அரசின் திட்டப்படி வவுனியாவில் உள்ள களஞ்சியத்தில் இருந்து முத்திரையிடப்பட்ட வாகனங்களில் எடுத்து வரப்படும் பொருட்கள் கிளாலிக் கடல்நீரேரியூடாக எப்படி எடுத்துச் செல்வது- சிறுபடகுகளின் மூலமாகக்கூட இவ் அத்தியாவசியப் பொருட்களை குடாநாட்டுக்கு எடுத்துச் செல்வதற்காகவேனும், கிளாலிக் கடல்நீரேரி மீதான தடையை நீக்குவதற்கு அரசு தயாராக இல்லை. இந்த நிலையில் வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற அரசின் அறிவிப்பை எவ்வாறு ஏற்றுக்கொள்வது நடைமுறையில் பூரண பலனைத் தராத அரசின்மேற்படி திட்டத்தை தென்பகுதி வெகுசனத் தொடர்புசாதனங்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளன, இதன் மூலம் அரசின் சில கபட நோக்கங்களுக்கு இவை ஊக்கம் ஊட்டுகின்றன, அரசின் மேற்படி நடவடிக்கையின் பின்னணி குறித்து தென்பகுதி வெகுசனத் தொடர்பு சாதனங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தால் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கான அரச தரப்பினரின் நல்லெண்ண சமிக்ஞை என்று இந்த நடவடிக்கையை வர்ணிப்பதற்கு நியாயமில்லை.

ஒரு தனிப்பட்ட வியாபார நிறுவனத்துக்கும் அரசுக்கும் இடையில் பரஸ்பர அனுகூலங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதே இந்த நடவடிக்கை என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்படி வர்த்தக நிறுவனம் வடபகுதிக்கான பொருள் விநியோகத்துக்கான ஏகபோக உரிமையும் வவுனியாவில் பிரமாண்டமான களஞ்சிய வசதியும் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை மூலம் அதிக இலாபமடையப் போவது இந்த வர்த்தக நிறுவனம்தான் 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது சில அரசியல்வாதிகளுக்கு இந்த நிறுவனம் மேற்கொண்ட நிதி உதவிக்கான கைமாறுகளில் இதுவும் ஒன்று என்றும் இவ்வாறான அரசியல்வாதிகளுக்கும் அரசுக்கும் உறவுகளின் தொடர்ச்சியே இது என்றும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசின் மேற்படி திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் வடபகுதியின் அத்தியாவசியப் பொருள்களுக்கான சந்தையின் பெரும்பகுதியை இந்த வர்த்தக நிறுவனம் கைப்பற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன் வடபகுதியின் உற்பத்திப் பொருள்களையும் இந்த வர்த்தக நிறுவனம் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு விநியோகிப்பதற்கான வசதி வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. மேலும் இவ்வாறான இருவழி வர்த்தகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதைத் தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்க அரசு விரும்பலாம்.

இவ்வாறான தரைவழி விநியோகத்தைக் காரணம்காட்டி தற்பொழுது அரசுக்கு அதிக செலவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் குடாநாட்டுக்கான கப்பல் மூலமான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தை அரசு இடைநிறுத்திக் கொள்தவற்கும் சந்தர்ப்பம் உண்டு.

''லட்சக்கணக்கான மக்களின் உணவு மற்றும் அத்தியவசியப் பொருட்களுககான விநியோகத்தை தனியொரு வர்த்தக நிறுவனத்திடம் கையளிப்பது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விடயம்- இந்த நிறுவனம் தனது இலாபத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கும்-அத்தியாவசியப் பொருட்கள் சீராகக்கிடைப்பதை இந்த நிறுவனம் உறுதிசெய்ய வேண்டியதில்லை, இலாபம் கிடைக்காத பட்சத்தில் மேற்படி நடவடிக்கையை எந்த நேரமும் இந்த நிறுவனம் கைவிடத்தயங்காது. இவ்வாறான சூழ்நிலையில் மேற்படி பொருள் விநியோகத்தை தனியார் வர்த்தகரிடம் எவ்வாறு ஒப்படைப்பது''? இவ்வாறு யாழ், அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிய உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகளை சிறிலங்கா அரசு அரசியலுடன் தொடர்புபடுத்தி வருகிறது என்றும் இச்சேவைகளை அரசியல் காரணங்களுக்காக கட்டுப்படுத்தும் போக்கை அரசு கையாண்டு வருவதாகவும் யாழ், செயலகத்தின் மற்றுமொரு உயர் அதிகாரி தெரிவித்தார், இவ்வாறான போக்கை அரசு கைவிட்டு மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சாத்தியமான நடவடிக்கை எடுக்க வேண்டும்,

-கணேசலிங்கம்

# அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது கட்டுப்பாடு விதிக்கச் சட்டமூலம்

(கொழும்பு)

அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகளை மேற்கொள்ள சட்டமூலமொன்று விரைவில் கொண்டுவரப்படும்.

அனைத்து தொண்டர் நிறுவனங்களும் அவசரகால சட்ட விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டபின் அவற்றை நிர்வகிப்பதற்கு ஏற்றவகையில் மேற்படி சட்டங்கள் வரையப்படும்.

இவ்வாறு சிறிலங்காவின் புனர்வாழ்வு 'புனரமைப்பு' சமூக நலத்துறை அமைச்சர் தயாரத்தின தெரிவித்துள்ளார்.

வருடமொன்றிற்கு ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேல் வருமானமாகப் பெறும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் புனர்வாழ்வுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டும் எனவும் இவற்றிற்கு சகல கணக்கு விபரங்களும் சமர்ப்பிக்கப் படவேண்டும் எனவும் அவசரகால சட்டவிதிகளின்கீழ் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினால் உத்தரவிடப்பட்டது.

வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தோர் சம்பந்தப்பட்ட உணவு, குடியிருப்பு, சுகாதாரம்போன்ற விடயங்களில் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன. சிறிலங்கா அரசால் காலத்திற்குக் காலம் கொடுக்கப்படும் மறைமுக அழுத்தங்களுக்கு மத்தியிலும் மேற்படி நிறுவனங்கள் செயற்பட்டுவருகின்றன.

சிறிலங்கா அரசு நேரடியாகவே இந்நிறுவனங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் முகமாகவே புதிய நிரந்தர சட்ட விதிகளைக் கொண்டுவரவுள்ளது. இச் சட்ட விதிகள் வடக்கு கிழக்கில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தொண்டர் நிறுவனங்கள் ஆற்றும் பணிகளை மட்டுப்படுத்தவும் அரசு நினைத்த நேரத்தில் நிறுத்தவும் கூடிய வகையிலேயே ஆக்கப்படுகின்றன எனக் கருதப்படுகின்றது.

# புலிகள் நடவடிக்கையை ஒடுக்க மத்திய அரசு நிதிவழங்க தயார்

## மத்திய அமைச்சர் தங்கபாலு

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு எவ்வளவு தொகைப் பணத்தையும் வழங்கத் தயாராக இருப்பதாக மத்திய நலத்துறை இணை அமைச்சர் திரு. கே. வி. தங்கபாலு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க மத்திய அரசு தமிழக அரசுக்கு எந்த வித உதவிகளையும் வழங்கவில்லை என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அண்மையில் குறிப்பிட்டிருந்தது சுட்டிக்காட்டத்தக்கது.

இவரது இக்கூற்று தொடர்பாக தங்கபாலு தெரிவிக்கையில் மேற்படி நடவடிக்கைக்காக மத்திய அரசு கடந்த காலங்களில் பத்துக் கோடி ரூபாவை தமிழகத்திற்கு வழங்கியது எனவும் இன்னும் வழங்க அரசு தயாராக இருப்பதாகவும் கூறினார்.

இதேவேளை ஜெயலலிதாவின் இக்கூற்றை வன்மையாகக் கண்டித்த தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி மத்திய அரசு இதற்கென வழங்கிய பணத்தை தமிழக அரசு வேறு தேவைகளுக்கு செலவிட்டுவிட்டதனால் இதற்கென பயன்படுத்தியதற்கான சான்றிதழ்களைக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

### தென்மாகாண

சரத் தெரிவாவர் என்பது தான் கேள்விக்குறியாக இருப்பதாகவும் இதற்கான விடையை இன்று நடைபெறும் தேர்தலே தீர்மானிக்கும் எனவும் வெளித்தாஸ் மேலும் தெரிவித்தது.

### துணைப்படை

கேணி), 2 ஆம் லெப்டினன்ட் ஆ. செல்வராசா (மருதோடை நெடுங்கேணி) ஆகிய இவ்விருதுணைப்படை வீரர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### புகையிரத

வீதி, யாழ்ப்பாணம்.

மேற்குறிப்பிட்ட இவர்கள் புகையிரத எழுதுநர் சேவைக்கு தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் 04. 04. 1994 ந் திகதி முற்பகல் 8.30 மணிக்கு இலங்கை புகையிரத சேவைகள் பொதுமுகாமையாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்து தமது நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு புகையிரதப் பொது முகாமையாளரால் கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைச்சான்றிதழ், தேசிய அடையாள

### போராடும்

கேள்வி: ஏதாவது முயற்சிகள் எடுக்கப்படுகிறதா?

பதில்: பலர் அங்கு போய் வருகின்றனர் அங்கிலிக்கன் ஆயர் சர்வோதயத் தலைவர் ஆரியரட்ன அங்கு போய் வந்தனர். அங்கு போனவர்கள் அனைவரும் நான் சொல்வதை ஏற்றுக் கொள்வர். யாழ் மக்கள் கஷ்டப்படுகின்றனர் எனக் கூறினால் அதைவைத்து அவர்களை இன்னும் கஷ்டப்படுத்தினால் யுத்தத்தை விட்டு அரசிடம் வந்து சேருவர் என அரசு கருதுகின்றது. ஆனால் அங்குள்ள மக்கள் மிகவும் தைரியத்துடன்தான் இருக்கின்றனர் இந்த தைரியத்தை முறிக்க இன்றைக்கு அரசுக்கு சக்தி இருக்கும் என நான் நம்பவில்லை.

''பிரிட்டனில் இரண்டாவது உலகமகா யுத்த காலத்தில மக்கள் பெரும் கஷ்டப்பட்டனர் தாம் கஷ்டப்பட்ட போதிலும் யுத்தம் நடக்கின்றது என்ற முறையில் அவர்கள் தைரியத்துடன் வாழ்ந்தனர் இதே நிலையில் நான் யாழ்ப்பாணத்தில் கண்டபோது எனக்கு பெருமை ஏற்பட்டது. தமிழன் என்று சொல்லிக் கொண்டு இங்கு வருபவர்கள் பிச்சை எடுக்கின்றனர் அங்குள்ளவர்கள் மகிழ்ச்சியாகவும் தைரியமாகவும் இருப்பதை பார்க்கும் போது எனக்கு மகிழ்

தடையை சமாளிக்கின்றனரா?

பதில்: நன்றாக சமாளிக்கின்றனர். சாதாரண மாதபொது மக்களை பொறுத்தவரையில் ஓரளவு சமாளிக்கின்றனர். சிறு பிள்ளைகளே சத்தான உணவு மீன், இறைச்சி, பருப்பு என்பனவை இல்லாது மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதை பார்க்கும் போதுதான் பெரும்பரிதாபமாக உள்ளது.

கேள்வி: போக்குவரத்து பிரச்சினைகள் உள்ளனவே?

பதில்: இதை பலரும் என்னிடம் கூறினர்.

கேள்வி: இந்த துன்பங்களை அரசிடம் கூறினீர்களா?

பதில்; அதை நான் சொல்லவில்லை. எந்த சூழ்நிலையில் ஒரு சமாதான சூழ்நிலைக்கு வரலாம் என்பது பற்றியே நான் அங்குள்ள மக்கள் உறுதியாக இருக்கையில் அவர்கள் பரிதாபமாக இருப்பதாக நான் கூறவில்லை சிலர் போல் அரசிடம் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் தயவு செய்து அரசே உதவி செய்யுங்கள் என நான் மன்றாட விரும்பவில்லை- இது அவர்களது முயற்சிக்கு எதிரானது- அப்படி நான் ஒருபோதும் கேட்கமாட்டேன்- உறுதியாகவும் தன் மரியாதையுடனும் வாழும் மக்களை நான் மதித்து பேசுவதையே விரும்பு

# கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு; உயிர்களோடு விளையாடும் செயல்

## தமிழர் விடுதலைக் கூட்டணி கண்டனம்

(கொழும்பு)

இணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சிகளைக் கண்டித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உயிர்களோடு விளையாட முற்படாமல் தமிழர் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வைக் காண அரசு தனது சக்திகளைப் பயன்படுத்த வேண்டும் என்று கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் சார்பில் எம். சிவசிதம்பரம் ஒப்பமிட்டு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இணைக்கப்பட்டுள்ள வட, கிழக்கு மாகாணங்களை விரைவில் ஓர் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தி பிரிக்கப் போவதாக ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அறிவித்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது தமிழ் மக்களின் பிரச்சினைகளை மனதில் கொள்ளாமல் ஜனாதிபதி அவர்கள் அண்மைக் காலத்தில் அடிக்கடி அறிக்கைகள் விடுவது சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக அமைவது மட்டுமன்றி பேச்சு வார்த்தை மூலம் காணப்படக் கூடிய தீர்வுக்கான வாய்ப்பையும் முற்றாக அடைத்துவிடும் நியாய பூர்வமான காரணங்களை முன்வைத்தே தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் இம் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளன என்பதைக் கூட சிறிதும் பொருட்படுத்தாமல் சர்வஜன வாக்கெடுப்புப் பற்றியே திரும்பத் திரும்ப ஜனாதிபதி கூறிவருகின்றமை வேதனைக்குரியதாகும்.

கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உயிர்களோடு விளையாட முற்படாதீர்கள் என்றும், இச் செயலில் தனது சக்திகளை வீண் விரயம் செய்யாது அதை தமிழர் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வைக்காண செலவிடும் படியும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி விஜேதுங்காவை வேண்டுகின்றது.

பொதுமக்களால் தெரிவு செய்யப்படாத ஓர் இடைக்கால ஜனாதிபதி அத்தகைய ஒரு தேர்தல் மூலம் மக்களின் அங்கீகாரத்தை பெறாது பாரிய மாற்றங்களை செய்ய முற்படுவது ஜனநாயகவிரோத செயலாகும் என அதில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேவை நலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் சேவை நலத்தை பாராட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு தேநீர் விருந்துபசாரமொன்றை மேற்படி நிலையத்தில் நடத்தவுள்ளது.

# எறிகணைக்கு பெண் பலி

இலவாலைப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை பண்டத்தரிப்பு பற்றிமாதா வீதியில் விழுந்து வெடித்ததில் 45 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக் காலை நடைபெற்ற இவ் எறிகணைத் தாக்குதலினால் இறந்தவர் பற்றிய பெயர் விபரங்கள் தெரியவரவில்லை. (5)

### டி. பி. யின்

பலத்தையும் பிரயோகித்து தமது வெற்றியை உறுதி செய்ய முனைவதாக தெரிவித்த அவர் இத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல், பொது தேர்தல் என்பனவற்றிற்கு ஒரு முன்னோடித் தேர்தல் என்று கூறினால் மிகையாகாது என தெரிவித்துள்ளார்.

### திடீர்

ஒருவர் வீரச்சாவடைந்தார்,

வீரச்சாவடைந்த 2 ஆம் லெப்டினன்ட் குமரன் (இராசேந்திரம் சிறிதரன் கொடிகாமம்; தற்போதைய முகவரி மந்துவில் கொடிகாமம்) இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

திருநெல்வேலி சிவன் கோவில்
புனராவர்த்தனப் பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேக
விஞ்ஞாபனம்

மஹாகும்பாபிஷேகம் 27-03-94 ஞாயிற்றுக்கிழமை காலை 7-45மணி முதல் நண்பகல் 12-00 மணி வரையிலான சுபவேளையில், பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ ச. யோகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

கிரியாரம்பம்: 23-03-94 புதன்கிழமை காலை 6-00 மணிமுதல்

எண்ணெய்க்காப்பு: 25-03-94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் 26-03-94 சனிக்கிழமை நண்பகல்

# மரண அறிவித்தல்கள்

## பஸ்ரியாம்பிள்ளை சிங்கராயர்

மணிமுதல் 26-03-94 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு நிறைவுசெய்யலாம்.

முக்கிய கிரிகைகளிலும் இறைவனுக்கு எண்ணெய் சாத்தி பேரின்ப பேறு அடைவதிலும் பக்தர்கள் பங்கு கொண்டு இறையருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

திருநெல்வேலி சிவன்கோவில்,

திருநெல்வேலி. தேவஸ்தானமும்

ஆலய நிர்வாக சபையாரும்

(7828)

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர்ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல் (ஐஸ் கிறீம் வாகனம் உட்பட) 25-03-1994 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

(7830) நிர்வாகம்

## வேலைவாய்ப்பு

### இயந்திரவியல் படவரைஞர்கள்

- அரசாங்க / தனியார் நிறுவனமொன்றில் படவரைஞர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள்,
- இத்துறையில் வேறு எவ்வழியிலாவது முன் அனுபவம் உள்ளவர்கள்
- தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் இயந்திரவியல் படம் வரைதலை ஒரு பாடமாகக் கற்றவர்கள்

மேற் குறிப்பிட்ட ஏதாவது ஒருதகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

சேவைக்கு முன் தகுந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

**முடிவுத் திகதி 10 04-1994**

விளம்பர இலக்கம்: 819
மே/பா ஈழநாதம்
81, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அட்டை அல்லது தங்களது அடையாளத்தை நிரூபிப்பதற்கான வேறு ஏதாவது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அடையாள அட்டை, பொலிஸ் அறிக்கை (பொலிஸ் அறிக்கை பெறப்பட முடியாதவிடத்து இராணுவ தொடர்பு அதிகாரியின் அறிக்கை), கிராம சேவை அலுவலரின் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் (பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்), இரண்டு முக்கியஸ்தர்களிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட நன்நடத்தைப் பத்திரம், உங்களால் பாவிக்கப்படும் பெயருக்கும், ஏனைய பத்திரங்களில் கொடுக்கப்பட்ட பெயருக்குமிடையில் ஏதாவது வேறுபாடு இருப்பின் சத்தியக் கடதாசி.

### மகாபொல

வைக்கப்பட்டுள்ளது.

இப் புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர்ப் பட்டியல், கடிதத்தின் மாதிரி மாணவர்களுக்கு அனுப்பப்பட்ட படிவம் ஆகியவற்றினை பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதமர்

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிட்டாதா என முழு உலகமும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் வடக்கு கிழக்கு இணைப்பின் எதிர்காலத்தை தீர்மானிக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த முயற்சிப்பது ஆபத்தானதும் விஷமத்தனமானதுமாகும்.

சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த முற்பட்டால் மீண்டும் இரத்தக் களரியே ஏற்படுமென அஷ்ரப் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

க்கும் போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது."

கேள்வி; புலிகளை சந்தித்து பேசியுள்ளீர்கள் அவர்கள் சமாதானத்திற்குத் தயாரா?

பதில்: அவர்கள் தயாராக இருப்பதாகவே கூறினர். அவர்கள் கூறியவற்றை நான் எழுத்துமூலம் அரச உயர் தலைவர்களிடம் கொடுத்தேன்.

கேள்வி: சிங்களத் தலைவர் யாரையாவது சந்தித்தீர்களா?

பதில்: படைத் தலைவர்கள், சில மந்திரிகள் ஆகியோரை சந்தித்தேன். இன்றைய சூழ் நிலையில் யார் யாரைச் சந்தித்தேன் என்று கூறுவது நல்லதல்ல.

கேள்வி: அவர்களது கருத்து என்ன? இரு தரப்பிலும் உயிரிழப்பு சேதம் ஏற்படுகிறது. இதற்கு முடிவு வேண்டும் என சிங்கள தரப்பில் ஆவல் உள்ளதா?

பதில்: தென்பகுதியில் சில இடங்களுக்கு சென்று அங்குள்ள சிங்கள மக்களுடன் பேசிய போது அவர்கள் சமாதானமே வேண்டும் என்றனர். அரசைப் பொறுத்தவரையில்புலிகள் மீது நம்பிக்கையில்லாததால் முன்வருகிறார்கள் இல்லை, சில மந்திரிகள் இந்த யுத்தத்தை வெல்ல முடியாது- என என்னிடம் கூறினர்.

கேள்வி: அரசிற்கு புலிகளில் நம்பிக்கை இல்லை; அதே போல அரசு விதிக்கும் தடைகளால் புலிகளுக்கு அரசு மீது நம்பிக்கையிழக்க காரணம் உண்டு என கருதுகிறீர்களா?

பதில்: சமாதானப் பேச்சுக்கு தயார் என அவர்கள் கூறுகின்றனர். அதற்கு நல்லதொரு சூழ்நிலை வேண்டும் என்கின்றனரே ஒழிய பொருள் வேண்டும் அது வேண்டும் இது வேண்டும் என நிபந்தனை விதிக்கவில்லை.

கேள்வி: பொருளாதாரத்

இறேன்- பாராளுமன்ற உறுப்பினர் சிலரிடம் நான் உபகண்டத்தில் கண்ட ஆஸ்பத்திரிகளில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி போல சுத்தமான ஆஸ்பத்திரி எதையும் காணவில்லை என கூறினேன்-

கேள்வி; உங்கள் போன்றவர்கள் சமாதானம் ஏற்பட இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்கலாமே? பிரபாகரன் அவர்கள் சமாதானக் கதவு திறந்திருப்பதாக பகிரங்கமாக கூறியுள்ளார்.

பதில்: எனக்கு தொழிற் கட்சியுடன் தொடர்பிருப்பதால் அக் கட்சியில் பெரியார் சிலருடன் இது குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினேன். பிரிட்டனுடனான உறவை இலங்கை விரும்பினால் இந்த எம்பிகளின் சொல்லை அவர்கள் ஏற்க வேண்டும் அரசு சமாதானப் பேச்சிற்கு முன்வர வேண்டும் தேர்தல் நான்குவருடத்திற்கு ஒரு முறை நடப்பது: தேர்தல் முடிந்த பின் சமாதானம் பேசலாம் என்று கூறுவது தவறு. சிங்கள அரசு நல்ல முறையில் தமிழரை வைத்திருந்தால் இன்றைக்கு இச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது- தமிழரை மனிதர் என மதித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது- இப்போது அங்கு இரு இனங்கள் உள்ளன- பெரும்பான்மை சிறுபான்மை என்று கூறுவதை நிறுத்துங்கள்- அரசு சிங்களவர்களுக்காகவே செயற்படுகிறது- இலங்கையைப் பொறுத்தவரை அங்கு தலை நிமிர்ந்து போராடுபவர்களை மதிக்காவிட்டால் சமாதானம் ஏற்படாது-

### 32,000 ஆசிரியர்களுக்கு

அவர்களுக்கு வழங்கப்படும் 2000 ரூபா சம்பளம் 2650 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது. அத்துடன் வருடாந்தப் படி உயர்வும் வழங்கப்படும்.

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் தற்போது உரும்பராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை சிங்கராயர் 23-3-94ல் காலமானார்

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், சாந்தினி (பிரான்ஸ்), தங்கராஜா (கனடா), சறோஜினி (பிரான்ஸ்), வசந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொன்ராஜா (பிரான்ஸ்), லின்டா (கனடா), யோகராஜா (பிரான்ஸ்), ராகவன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயானி, றீகன் (பிரான்ஸ்). சிந்து, பிரகாஸ் (கனடா), டானியன், ஜனவியன் (பிரான்ஸ்), பார்த்தியன், மேரி ஆன்(கனடா)ஆகியோரின் பேரனும், வைத்திலிங்கம், மேரிமனியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (24-3-94) இன்று காலை 8-00 மணிக்கு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

தகவல்:
கனகம்மா
(மனைவி)

(7834)

## விசுவலிங்கம் நடராசா

(ஆரியகுளம் சந்தி பேப்பர் கடை)

66, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விசுவலிங்கம் நடராசா 23-03-1994 அன்று காலமாகிவிட்டார்.

இவர் நாகரத்தினத்தின் அன்புக்கணவரும், யோகராசா விஜயராணி (ராணி), பரமகிரிநாதன் (நாதன்), அருணகிரிநாதன் (அருணா), விமலராணி (சிவா), செல்வநாதன் நகுலராணி (ஜெயா), நிர்மலராணி (பவானி) ஈஸ்வரநாதன் (ஈசன்), யோகராணி (தயா), செல்வநாதன் (ரகு) ஆகியோரின் தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

66, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
ந. பரமகிரிநாதன்
(மகன்)

(7835)